தமிழ்ப் பொழில்

தமிழாராய்ச்சித் திங்களிதழ்

துணர் : 59 மலர் : 9

உள்ளுறை

1. பகரமா வகரமா 385

முனைவர் ச. சுபாசு சந்திர போசு
துணைப் பேராசிரியர்
அரசர் கல்லூரி, திருவையாறு.

2. மௌரியரைப் பற்றிய சங்கப்பாடல்கள்
காலம் ஓர் ஒப்பாய்வு 391

(சென்ற இதழ் தொடர்ச்சி)

பூரண சந்திர ஜீவா, M. A ,
அரசு மேனிலைப் பள்ளி,
பாதிரிவேடு, மாதர் பாக்கம் (அஞ்)
செங்கற்பட்டு (மாவட்டம்) 601 202.

3. மலை முதல் மனை வரையிலும்
கண்ட பல கடவுளர் 396

மு. சண்முகம் பிள்ளை
சிறப்பு நிலைப் பேராசிரியர்
சுவடிப்புலம்-ஓலைச் சுவடித்துறை
தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்.

4. கரந்தைத் தமிழ்ச்சங்கச் சமணச் சிற்பம் 410

டாக்டர் சி. கோ. தெய்வநாயகம், பி.எச்.டி,
தஞ்சை.

5. கற்பனை கடந்தால் வீடாம் 414

டாக்டர் மொ. அ. துரை. அரங்கசாமி,
எம். ஏ , எம். ஓ. எல்., பி. எச். டி.

6. தொல்காப்பிய செய்யுளியல்
காண்டிகையுரை 425

பேராசிரியர் ச. பாலசுந்தரம்.

தமிழ்ப் பொழில்

கரந்தைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு — 2016

துணர்: 59 குரோதன — மார்கழி மலர்: 9

டிசம்பர் — ஜனவரி

1985 — 1986

[illegible]

முனைவர். ச. சுபாசுசந்திரபோசு

முன்னுரை :—

தொல்காப்பியர் (தொல். சொல். 199), காலந்தாம் மூன்றெனக் கூறி இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்ற மூன்று காலங்களைச் சுட்டினாலும் காலங் காட்டும் இடைநிலைகளைத் தொகுத்துச் சொல்லவில்லை. ஆனால், பிற்கால

இலக்கண ஆசிரியர்களும் உரையாசிரியர்களும் மூன்று காலங்களையும் காட்டும் இடைநிலைகளைத் தொகுத்துக் கூறியுள்ளார்கள். அவற்றில் எதிர்காலம் காட்டும வகையில் -ப்-, -வ்- என்ற இரண்டு இடைநிலைகள் காணப்படுகின்றன. இவற்றில் வரலாற்று அடிப்படையில் எது முதன்மை வடிவம் (Proto – form) : மாற்றம் பெற்ற வடிவம் எது ? எவ்விதம் மாற்றம் பெற்றுள்ளது ? என்பதை விளக்கும் வகையில் இக் கட்டுரை அமைகின்றது.

எதிர்கால இடைநிலைகள் :-

சேனாவரையரும் (தொல். சொல். 202) நச்சினார்க்கினியரும் (தொல். சொல். 2(4) -ப்-, -வ்-என்ற இரண்டையும் எதிர்கால இடைநிறைகளாகச் சுட்டுகின்றனா. பவணந்தி முனிவரும்

> பவ்வ மூவிடத் தைம்பால் எதிர்பொழுது
> இசைவினை இடைநிலை யாமிவை சிலவில (நன். 144)

என்ற நூற்பாவில் மேற்காட்டிய இரு எதிர்கால இடைநிலைகளையும் குறிப்பிடுகின்றார். பொதுவாக, இலக்கண ஆசிரியர்கள், உரையாசிரியர்கள் கால இடைநிலைகளைத் தொகுத்துக் கூறுகின்றார்களேயொழிய எவை முதன்மை வடிவம், மாற்று வடிவம் எனப் பகுத்துக் கூறுவதில்லை. காரணம் அவர்கள் கால மொழியில் அமைந்த கால இடைநிலைகளைத் தொகுத்துக் கூறுவதே அவர்கள் பணியாக இருந்தது சான்றாக, -த்-, -ட்-, -ற்- என்ற மூன்று இடைநிலைகளும் இறந்த காலம் காட்டினாலும் இவற்றில் -த்- என்பது அடிப்படை வடிவம் மற்றைய இரண்டும் இதன் மாற்றுவடிவம், உருபொலியன் மாற்றம் பெற்றவை என்பதை விளக்கவில்லை. இவ்வாறு விளக்காவிட்டாலும் -ட்-, -ற்- என்ற இரண்டும் -த்- என்ற வடிவத்தின் மாற்று வடிவங்கள் என்பது அவர்கள் அறியாதது அல்ல. புணர்ச்சி பற்றி விளக்கும் இடங்களில் இம்மாற்றங்களைத் தெளிவாகவே கூறுகின்றார்கள். மொழியியல் அறிவு வளர்ச்சி பெற்றுள்ள இக்காலத்தில் தொடர்புடையவை எல்லாம் பொருத்திப் பார்க்கப்பட்டு விதிகள் மூலம் தொடர்புபடுத்தப்படுகின்றன.

---

1. மேலும் சில இடைநிலைகள் எதிர்காலம் காட்டப் பயன்லட்டாலும் இங்கே -ப்-,-வ்- என்ற ஒலித் தொடர்புடைய வடிவங்கள் மட்டுமே விளக்கப்படுகின்றன.

இந்நிலையில், இக்கால அறிஞர்கள் -ப்- என்பதை முதன்மை வடிவமாகவும் -வ்- என்பதை மாற்று வடிவமாகவும் கொள்ளும் கொள்கையும் (வேங்கடராஜுலு ரெட்டியார் 1937-38:2) -வ்- முதன்மை வடிவமாகவும் கொள்ளும் கொள்கையும் (லே லிஸ்கர் 1951:111-114) காணப்படுகின்றன. இவ்விரண்டில் ஒன்று மட்டுமே முதன்மை வடிவமாக இருக்க வேண்டும்; மற்றொன்று முதன்மை வடிவத்திலிருந்து உருபொலியன் மாற்றம் பெற்றிருக்கவேண்டும்.

பகரம் :-

தமிழிலுள்ள வினையடிகள் அவை ஏற்கும் கால இடைநிலைகள், செயப்படுபொருள் குன்றாவினை விகுதிகள் போன்றவை ஏற்பதைக் கொண்டு மெல், இடை, வல்வினைகள் பாகுபாடு செய்யப்படுகின்றன. -ப்- என்பதை முதன்மை வடிவமாகக் கொண்டால் -ன், -ண் கொண்டு முடியும் மெல் வினைகளுக்கு முன்னும் -ல் (> ற்), -ள (>-ட்) கொண்டு முடியும் இடைவினைகளுக்கு முன்னும் எவ்வித மாற்றமும் பெறாமல் வருகின்றது எனக் கொள்ளலாம்

என்பர் (குறுந். 222:8)
காண்பர் (குறுந் 81 4)
கற்ப (நெடுநல். 20)
கேட்பல் (புறநா. 27.10)

உயிரெழுத்து (V)-ய், -ர், -ழ் கொண்டு முடியும் வல்வினைகளுடன் -ப்- சேருமபோது இரட்டிக்கும்.

$$\text{(அ)}\quad ப் > ப்ப் \;\Big|\; வல்வினை \begin{Bmatrix} V \\ ய் \\ ர் \\ ழ் \end{Bmatrix} —$$

அளி-ப்-அ	>	அளிப்ப	(புறநா. 223.4)
உய்-ப்-அர்	>	உய்ப்பர்	(நாலடி. 66:2)
ஆர்-ப்-அவர்	>	ஆர்ப்பவர்	(கலித். 52:14)

-வ்- என்பதை முதன்மை வடிவமாகக் கொண்டால் மேற்காட்டிய (அ) உருபொலியன் மாற்ற விதிக்குமுன் -வ்- > -ப்- ஆகியது என்றொரு விதியைக் கூறிப் பிறகு -ப்- இரட்டித்தது எனக் கூறவேண்டும்.

-ப்- என்பதை முதன்மை வடிவமாகக் கொண்டால், அது உயிரெழுத்து, -ய், -ர், -வ், -ழ், -ள் கொண்டு முடியும் மெல் வினைக்கு முன் -வ்- ஆக மாற்றம் பெறுகின்றது எனக் கொள்ள வேண்டும்.

(ஆ) ப் > வ் | மெய்வினை { V, ய், ர், ல், ழ், ள் }

வரு-ப்-அம்	>	வருவம்	(நற்.169:2)
செய்-ப்-ஆம்	>	செய்வாம்	(குறுந். 197:1)
தேர்-ப்-ஆன்	>	தேர்வான்	(கலித். 37:2)
செல்-ப்-அல்	>	செல்வல்	(புறநா. 162:7)
வாய்-ப்-அல்	>	வாழ்வல்	(புறநா. 245:7)
ஆள்-ப்-அல்	>	ஆள்வல்	(கலித். 84:26)

இவ்வுருபொலியன் மாற்றத்தில் ஒன்றை முக்கியமாகக் குறிப்பிட வேண்டும். தமிழில் காணப்படும் ஒலிப்பிலாத் தடையொலி /p/ (voiceless stop) -வ்-ஆக மாற்றம் பெற்றது என்று கொள்வதைவிட இரண்டு உயிர்களுக்கிடையே அல்லது மேற்காட்டிய (ஆ.) மெய்களுக்கு முன் -ப்- வரும்போது அது (B) என்னும் உரசொலி (fricative) யாக மாற்றம் பெற்றுப் பிறகே -வ்-ஆக மாற்றம் பெற்றது எனக் கொள்ளவேண்டும். இககாலத் தமிழில் விதி ஆ. காட்டும் அமைப்பில வரும் -ப்- உரசொலியாகவே ஒலிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. தடையொலி உரசொலியாக மாற்றம் பெற்றது என்பதைவிட உரசொலி உரசொலியாக மாற்றம் பெற்றது என்று கொள்வதே பொருத்தமுடையதாகக் காணப்படுகின்றது. இக்காலநிலை பழந்தமிழிலும் இருந்திருக்குமோ என்பதை இம்மாற்றம் காட்டுகின்றது.

மேலே விதி ஆ-வில் காட்டிய முறைப்படி மெல்வினைக்கு முன்வரும் பகரம் எல்லா இடங்களிலும் வகரமாக மாற்றம் பெற்றது எனக் கொள்ள முடியாது. சுட்டுப்பெயருடன் முடியும் வினையாலணையும் பெயர், பலர்பால் வினைமுற்று வரும் இடம் போன்றவற்றில் மாற்றம் பெறாமல் முதன்மை வடிவம் -ப்- காணப்படுகின்றது.

அறிபவர் (கலித். 125:3) பாய்ப்பவை (கலித். 106:8)
ஊர்பவர் (கலித். 104:55) செல்ப (அகநா. 285:1)
ஆழ்பவன் (கலித். 134:50); கொள்பவர் (நற். 304:8)

வகரம :-

வகரத்தை முதன்மை வடிவமாகக் கொண்டால் —ன், —ண் கொண்டு முடியும் மெல்வினைக்கு முன்னும், —ல் (>ற்), —ள் (>ட்) கொண்டு முடியும் இடைவினைக்கு முன்னும் —வ்->ப் ஆக மாற்றம் பெற்றது என்னும் விதிகளைக் காட்ட வேண்டும்.

(இ) வ் > ப் | மெல்வினை { ன் / ண் } —

(ஈ) வ் > ப் | இடைவினை { ல் / ள் } —

இவ்வாறு காட்டப்படும் விதிகள் மொழியின் அமைப்பில் முறையே இருக்க வேண்டியதற்கு பதில் வேறொன்றை வருவித்துக் காட்டுவது போலக் காணப்படுகிறது. அதே போன்று, விதி அ-வில் காட்டப்பட்ட —ப்>-ப்ப்- என்ற மாற்றத்திற்கு முன் — வ்-ஐ முதன்மை வடிவமாகக் கொள்ளும் போது கீழ்க் காணும் விதியையும் அமைத்துக் கொள்ள வேண்டியுள்ளது.

(உ.) வ் > ப் | வல்வினை { V / ய் / ர் / ழ் }

இவ்வாறு ஒரு விதியை வகுத்துக் கொண்டுதான் -ப் > –ப்ப் ஆக மாற்றம் பெற்றது என்று கூறவேண்டியுள்ளது.

-வ்-ஐ முதன்மை வடிவமாகக் கொண்டு மெல்வினைக்கு முன் -ப்- ஆக மாற்றம் பெற்றது என விதி -ஆ-வை மாற்றியமைத்துக் கூறினாலும் இவ்விதி இரண்டு வடிவங்களுக்கும் பொதுவானதாகவே காணப்படுகின்றது. எனவே, -வகரத்தை முதன்மை வடிவமாகக் கொள்ளும்போது சிக்கல் இ., ஈ. உ என்னும் விதிகளில் தெரிகின்றன. இவ்விதிகள் மொழியின் இயற்கை அமைப்பிற்கு முரண்பட்டதாகத் தெரிகின்றன.

முடிவுரை

மேலே சான்றுகளுடன் விளக்கப்பட்டுள்ள கருத்துக்களின் அடிப்படையில் பகரமே எதிர்காலம் காட்டும் முதன்மையான

வடிவமாகும். -ன், -ண் கொண்டு முடியும் மெல்வினைக்கு முன்னும் -ல், -ள், கொண்டு முடியும் இடைவினைக்கு முன்னும விதி ஆ-வில் விளக்கியதைப் போலச் சில இடங்களிலும மாற்ற மின்றி நிலை பெற்றுள்ளது.

விதி அ. வில் காட்டியதைப் போன்று வல்வினைகளுடன் வரும்போது இரட்டிக்கின்றது. விதி ஆ-வில் காட்டியதைப் போன்று மெல்வினைகளுடன் வரும்போது -வ்- ஆக மாற்றம் பெறுகின்றது. இம் மாற்றம் காலத்தால் முற்பட்டதாக இருந்தாலும் பகரத்திலிருந்தே மாற்றம் பெற்றிருக்கின்றது. எனவே, -ப்- முதன்மை வடிவமாகவும் -வ்- மாற்று வடிவமாகவும் கொள்ள மேலே காட்டிய விளக்கங்கள் சான்றாக அமைகின்றன.

துணைபுரிந்த ஆய்வுகள் :-

சேனாவரையர், தொல்காப்பியம் - சொல்லதிகாரம் — உரை, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம். சென்னை, 1970.

நச்சினார்க்கினியர், தொல்காப்பியம் - சொல்லதிகாரம்—உரை சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1962.

வேங்கடராஜுலு ரெட்டியார் (1937—38), பிறவினையின் வேறுபாடு, Annals Oriental Researeh, Madras.

Lisker, Leigh (1951), "Tamil Verb Classification", Journal of the American Oriental Society, New Haven, pp. 111 - 114.

Subhas Chandra Bose, S, (1981), A Historical Study of Tamil Verb Morphology, Ph. D. Thesis (Unpublished). Madurai Kamaraj University, Madurai.

மௌரியரைப்பற்றிய சங்கப்பாடல்கள் காலம் ஓர் ஒப்பாய்வு

பூரண சந்திர ஜீவா, M. A.

(சென்ற இதழ் தொடர்ச்சி)

5 : 1 மௌரியர் ஆட்சிக் காலத்தில் தென்னிந்தியாவிற்கும் வட இந்தியாவிற்கும் இடையே தொடர்புகள் மிகுதியாயின ; வணிகத் தொடர்புகள் பெருகின. இந்தக் காலத்திலேயே வட இந்தியநாகரிகமும்,பண்பாடும மிகச்சிறப்பாகத்தமிழகத்தில் காலூன்றின. மௌரியரைக் குறித்து இலக்கியங்களில் வரும் குறிப்புகள் அனைத்திலும் பொதுவாகவே மேற்காணும் செய்திகள் உள்ளன மௌரியர் தம் படையெடுப்பிற்காக அமைத்த மலைநெறிகளைப்பற்றியும், அதன் வழியே வேற்று நாடுகளுக்குப் பொருள் தேடச் சென்ற தலைவனைப்பற்றியும் இப்பாடல்கள் ஒவ்வொன்றும் பேசுகின்றன. சான்றாக,

> "விண்பொரு நெடுங்குடை இயல்தேர் மோரியர்
> பொன்புனை திகிரி திரிதரக் குறைத்த
> அறையிறந்து அகன்றன ராயினும்"

(அகம், 69) என்ற பரங்கொற்றனார் பாடலை எடுத்துக்காட்ட இயலும். அத்தகைய மலைநெறிகளில் (அறைவாய்) மௌரியர் அமைத்த அறத்துறைகள் நிலைபெற்று விளங்கி, சூரிய மண்டிலம் போல் காலம் தவிராது இயங்கி, நாளெல்லாம் வந்து செல்லும் பலரையும் எதிர்நோக்கி இருக்கும் சிறப்பைக் கள்ளில் ஆத்திரையனார் காட்டுகிறார்.

> "உலக விடைகழி யறைவாய் நிறையே
> மலர்வாய் மண்டிலத் தன்ன நாளும்
> பலர்புற வெதிர்ந்த வறத்துறை நின்னே"

என்கிறார். அதுமட்டுமின்றி அத்தகைய மௌரியர் அமைத்த அறத்துறைகள் போன்றது உன் அறத்துறையும் (நின்னே) என்று கூறி, மௌரியர் செய்தது போன்ற அறப்பணிகள் அவர்கள் நாட்டிற்கு அப்பாலும் மன்னர்களால் செய்யப் பெற்றதாகக் கூறுகிறார். மேற்பாடலில் வேங்கடமலைப் பகுதியை ஆண்ட ஆதனுங்கன் என்பானது சிறப்பைக் கூறும் புலவர், மௌரியர் செய்வதுபோன்ற அறத்துறைகள் அவனால் செய்யப் பெறுவதை ஒப்பிடுவது கருதத்தக்கது.

5 : 2: அசோகரது கல்வெட்டுச் செய்திகளை இங்குக் காண்பது பயனுள்ளதாக இருக்கும். (கல்வெட்டின் தேவையான பகுதிகளே தரப்படுகின்றன) : (1) இரண்டாவது கற்பாறை ஆணை : "கடவுளர் விரும்புபவனும் காட்சிக்கு இனிமையானவனுமாகிய மன்னன், நாட்டின் எல்லா இடங்களிலும், அடுத்துள்ள சோழர், பாண்டியர், சத்தியபுத்திரர், கேரளபுத்திரர் நாடுகளிலும், தாம்ரபர்ணி வரையிலும் ... எல்லா இடங்களிலும் ... இரண்டு முறையில் நோய் தீர்க்கும் ஏற்பாடுகளைச் செய்திருக்கிறான். மனிதருக்கு நோய் தீர்க்கும் ஏற்பாடுகள், விலங்குகளுக்கு நோய் தீர்க்கும் ஏற்பாடுகள் ... சாலைகளில் கூட மாந்தர் விலங்குகள் நலத்திற்காகக் கிணறுகள் தோண்டப்பட்டுள்ளன ; மரங்களும் நடப்பட்டுள்ளன ...' (2) பதின்மூன்றாவது கற்பாறை ஆணை : கடவுளர் விரும்பும் மன்னன் இதனை, அதாவது தர்ம வெற்றியைத் தனது தலையாய வெற்றியாகக் கருதுகிறான். இவ்வெற்றியைத் தன்னாட்டிலும் அறுநூறு யோசனைவரை அண்டை நாடுகளிலும் ... அதேபோன்று தெற்கே சோழர், பாண்டியர் நாடுகளிலும் தாம்ரபரணி வரையிலும், இங்கும் தன்னாட்டிலும் யவனர். காம்போஜர், நாபகத்தின் நாக பந்திகள், போஜரி, பிட்னிகர், ஆந்திரர்கள், புலிந்தர்கள் வாழுமிடங்களிலும் பெற்றுள்ளான். எல்லா இடங்களிலும் அவர்கள் கடவுளர் விரும்பும் மன்னனின் தர்மபோதனைகளைப் பின்பற்றுகின்றனர். கடவுளர் விரும்பும் மன்னனின் தூதுவர் போகாத இடங்களில் கூட மக்கள் அவனது தர்ம ஆணையையும், தர்மபோதனையையும் கேள்விப்பட்டுத் தர்மத்தைப் பின்பற்றுகின்றனர் ; எதிர்காலத்திலும் பின்பற்றுவார்கள்."

இக்கல்வெட்டில் சோழர், பாண்டியர், சேரர், சத்திய புத்திரர் நாடுகளிலும் தனது அறத்துறைப் பணிகளைத் தான் நிறுவி இருப்பதாக அசோகர் கூறுகின்றார். வேற்றுநாடுகளிலும் தனது தர்மம் பின்பற்றப் பெறுவதாகக் கூறுவது இங்கு கருதத்தக்கதாம்.

5:3: கள்ளில் ஆத்திரையனார் பாடல் மேற்கண்ட கல்வெட்டுச் செய்திகளை உறுதி செய்யக் காணலாம். ஆதனுங்கன் என்பான் சிறந்த வள்ளல், மௌரிய மன்னர் நிறுவிய அறத்துறைகளைத் தானும தன்னாட்டில் நிறுவியவன். இவன் வேங்கடமலையைச் சூழ்ந்த பகுதிகளை ஆண்டவன் என்று முன்பே பார்த்தோம். இவனது பிற்கால வழியினர் என்று கருதத் தக்க குறுநில மன்னர்கள் நுங்கன்

என்ற பெயரில் ஆந்திரநாட்டு நெல்லூர் மாவட்டப்பகுதிகளில் 13-14 ஆம் நூற்றாண்டு வரை வாழ்ந்ததாக அவ்வை சு. துரைசாமி அவர்கள் ஆராய்ந்து கூறுகின்றார்[7]. எனவே நெல்லூருக்கு அப்பால் மௌரியர் அமைத்திருந்த அறத்துறைகளையும், வேற்று நாடுகளில் அவர்கள் அமைத்திருந்த அறத்துறைகளைப்பற்றியும் அசோகர் கல்வெட்டுக் கூறும் செய்திகளை நோக்க ஆத்திரையனார் பாடற்செய்தி அதனை உறுதி செய்யக் காணலாம். ஆதனுங்கன் போன்றோர் அத்தகைய தர்மத்தைப் பின்பற்றினர் எனலாம். இதையே அசோகர் தர்ம விஜயம் என்கிறார். தண்டத்தால் வெல்ல முடியாததைத் தர்மத்தால் வென்றேன் என்னும் பெருமிதம் கல்வெட்டுச் செய்தியில் காணவில்லையா ? கல்வெட்டுகளிலும், சங்கப்பாடலிலும காணும ஒப்புமையான செய்திகள் கொண்டு நோக்க, சாலைகளில மக்கள, விலங்குகள் நன்மைக்காக அறப்பணிகள் செய்யப்பெற்றமையும, இவற்றில் மௌரிய மன்னாகள் தங்கள் நாட்டிலும், அடுத்துள்ள நாடுகளிலும் செய்தவையும், அவர்களது தர்மபோதனையைப் பின்பற்றி வேற்றுநாட்டு மன்னர்கள் அறப்பணிகள் செய்ததும் ஆகியவை நமது கருத்தை ஈர்க்கக் காணலாம்.

5 : 4 இத்தகைய அறத்துறைகள் நிறுவிய ஒரே மௌரிய மன்னர் பேரரசர் அசோகர்தான். ஆத்திரையனார் பாடல் அசோகருடைய காலத்தைச் சேர்ந்தது எனலாம் அசோகர் காலத்துக்குப் பிறகும் அறப்பணிகள் நடைபெற்றிருக்கலாம், அல்லது பிற்காலத்தில் அதை நினைவூட்டிக் குறித்திருக்கலாம் என்று சிலர் கருதலாம். அரசன் ஆதனுங்கன் முன்னிலையில் அவன் அறத்துறையைப் புகழும் புலவர் அவன் மதிக்கும், அவனுக்கு ஏற்புடைய ஒன்றையே ஒப்பாக எடுத்துரைக்க வேண்டும். பிற மன்னன் ஒருவனின் காலத்தால் அழிந்து, இல்லாதொழிந்ததை ஒப்பிட்டுக் கூற மாட்டார். அசோகர் கி. மு. 232 இல் இறந்தார். தன் இறுதிக் காலத்தில் செல்வம் செல்வாக்கினை இழந்து, தன் அறப்பணிகள் பெயரன் சம்பிரதியாலும் அமைச்சர்களாலும் தடைசெய்யப்பெறவே அதனால் மனமுடைந்து மறைந்தார். கி. மு. 230 இல் பேரரசின் தெற்கு மாநிலம் உடைந்து பிரிந்து சாதவாகனர் ஆட்சிக்கு உட்பட்டது. மேற்குத் தக்காணப் பகுதியை ஆந்திர குலமன்னரான சாதவாகனர் கைப்பற்றி முதல் மன்னன் சிமுகன்-அசோகர் இறந்து இரண்டாண்டுகளில்-பட்டம் எய்தினான் (கி. மு. 230).

தென்னிந்தியாவில் மௌரியர் வென்ற நிலப்பகுதிகள் இதனால் துண்டிக்கப்பட்டுத் தன்னாட்சி பெற்ற நாடுகளாயின. மேற்காணும் செய்திகளால் அசோகர் இறந்த உடனேயே மௌரியப் பேரரசு தெற்கே சிதறி அழிந்து போயிற்று என்று அறியலாம். இத்தகைய ஆட்சிநிலையில்-குழப்ப நிலையில் ஆத்திரையனார் பாடும் பெருமையும் பெருமிதமும் நிறைந்த அறப்பணிகளை மௌரியர் தொடர்ந்து நடத்தியிருக்க இயலாது. மௌரியர் பெருமைக்குரிய மன்னர்களாய்ப் பேரரசு செலுத்திய போதே அவரது மேற்கண்ட பாடல் பாடப்பெற்றிருக்க வேண்டும் என்பதைத் 'திண்கதிர்த் திகிரி திரிதரக் குறைத்த' என்ற அடியால் புலவர் உணர்த்துகிறார். மௌரியரது ஆணைச்சக்கரம் வலம்வருவதற்காக வெட்டியமைத்த என்பது இதன் பொருளாகும். மௌரியரது ஆணைச் சக்கரம் சிறப்புற்று விளங்கிய நிலையைப் புலவர் ஆதனுங்கனிடம் எடுத்துரைத்துப் போற்றுகிறார். இதனால் ஆதனுங்கனின் நாட்டிற்கு வடக்கே ஆந்திரத்தில் அப்போது மௌரியப் பேரரசு நிலவியது என்பது உறுதி.

5 : 5 : அசோகரின் மேற்காணும் கல்வெட்டுகள் அவரது 12–13 ஆம் ஆட்சியாண்டில்-ஏறக்குறைய கி. மு. 257 இல் வெளியாயிற்று. எனவே அறப்பணிகள் சில ஆண்டுகளுக்கு முன் கி. மு. 261ல் நடந்த கலிங்கப் போரைத் தொடர்ந்து-ஆரம்பமாயிற்று என்று கொண்டு, அசோகருக்குப் பின் கி. மு. 230 வரையுள்ள ஏறக்குறைய 30 ஆண்டுகளைக் கள்ளில் ஆத்திரையனார் பாடல் எழுந்த காலமாகக் கொள்ளலாம். இச்சான்றுகளால் மௌரியரைப் பற்றிய பாடற்குறிப்புகள் கி. மு. 300 முதல் 230 வரையிலான ஏறக்குறைய 70 ஆண்டுகளில் எழுதப் பெற்றனவாகக் கொள்ளலாம். அப்புலவர்களின் காலமும் இக்காலப் பகுதிக்குரியதாகும்.

6 : முடிவாக மாமூலனாரும், கள்ளில் ஆத்திரையனாரும், பரங்கொற்றனாரும் கி. மு. 3 ஆம் நூற்றாண்டினர் என்று உறுதி கூறலாம். இவர்களால் பாடப்பெற்ற கரிகாலன், இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன், உதியஞ்சேரல் போன்ற மன்னர்களது காலம் பற்றிய கருத்துக்கள் தனி ஆய்விற்குரியதாகும் எனலாம்.

குறிப்புகள்

1. நீலகண்ட சாத்திரி, கே. ஏ. — தென்னிந்திய வரலாறு, பாகம் I — பக் 142.
2. Ibid பக் — 141.
3. மாங்குடி மருதனார் — மதுரைக் காஞ்சி வரிகள் 503 - 510, 770 — 775.
. பரணர் — பதிற்றுப் பத்து — 5, 4 : 10 — 18.
5. Dr. Shashi Kant – Kharavela And Asoka, 1971.
காரவேலனின் ஹதிகும்பா கல்வெட்டு, வரி 11. பண். சசிகாந்த் அவர்களின் ஆய்வின் அடிப்படையில் காரவேலன் பட்டமெய்திய ஆண்டும், பிறக்கருத்துக்களும் இக்கட்டுரையில் ஆளப்பட்டுள்ளன.
6. Sathianathaier, Prof. R — History of India, Vol. I, P. :69 Map.
12° வடஅட்சரேகையை ஒட்டிய எல்லை என்பது மேற்கே மைசூர் மாவட்டம் கிழக்கே தென்னாற்காடு மாவட்டம் இவற்றிடையே செல்லும் வடஅட்சக்கோடு. சோழநாட்டைத் தனது அண்டை நாடாகச் சொல்லும் அசோகரின் 2 ஆவது, 13 ஆவது கல்வெட்டுகளின் அடிப்படையில் பேரா. சத்தியனாதையரின் கருத்து ஏற்க முடியாத ஒன்றாகிறது.
7. துரைசாமி, ஔவை. சு. — புறநானூறு உரை, பாடல் 389. கழக வெளியீடு 568-1968.

மலை முதல் மனை வரையிலும் கண்ட பல கடவுளர்

மு. சண்முகம் பிள்ளை

மலையும் மரமும் மரம்செறி காவும்
காடும் மேடும் கள்ளியும் புதரும்
சுனையும் துருத்தியும் சுழியும் கடலும்
நாடும் ஊரும் நல்மனை இடங்களும்
மருவி சந்தியும் மறுகுகூடு சதுக்கமும்
மன்றில் பொதியிலில் கந்துடை நிலையினும்
யாழினும் பிறவினும் எங்கணும் மன்னி
உவந்துறை கடவுளர் காட்சியும் உளவே.

பெருங்கடவுளர் என்று ஒருசில கடவுளர்க்குக் கோவிலும் விழாவும் எடுத்து வழிபட்டமையைப் பேரூர்களிலும் நாகரிகம் வளர்ச்சி பெறத் தொடங்கிய சிற்றூர்களிலும்தான் சங்க காலத்திலே காண முடிகிறது. இந்த ஊர்களிலும் கூடப் பற்பல சிறுசிறு கடவுளர்களையும் மக்கள் போற்றி வந்திருக்கின்றனர். இந்தக் கடவுள்களில் பெரும்பாலனவும் மக்களுக்குத் துன்பமும் கொடுமையும் புரிந்தனவாகும். இவற்றை 'உருகெழு மரபின் கடவுள்' (பதிற். 21.5) என்று கொண்டனர். அச்சம், வருத்தம் என்னும் பொருள்தரும் அணங்கு, சூர், பேய் முதலிய பெயர்களால் இத்தெய்வங்களைக் குறிப்பிடுதலும் கவனிக்கத் தக்கது. ஆகவே, மக்கள் தமக்கு அச்சத்தை விளைவித்த பல பொருள்களும் தம்மை வருத்தும் இயல்பின எனவும், பேராற்றல் படைத்தன எனவும் கொண்டு அவற்றைக் கடவுளாகவே தொழுதனர். இவர்களுடைய வணக்கத்திற்கு மலை, காடு, மரம், சுனை, ஆற்றிடைக்குறை, கழி, கடல், பரம் முதலியன எல்லாம் உரியவாகின்றன. யாழ், முரசு, ஆயுதம் முதலிய கருவிகளிலும் தெய்வம் உறைவதாகப் போற்றப்படுகிறது. மக்கள் வாழும் வீட்டிலும் இல்லுறை தெய்வங்கள் சில இடம் பெறுகின்றன. ஊர்களில் உள்ள தெருச் சந்திகள், மன்றங்கள், பொதுச்சபையிடங்கள் இவற்றிலும் தெய்வங்கள் குடி கொண்டுள்ளன.

'காடும் காவும், கவின் பெறு துருத்தியும்,
யாறும் குளனும், வேறுபல் வைப்பும்,
சதுக்கமும் சந்தியும் புதுப்பூங் கடம்பும்
மன்றமும் பொதியிலும் கந்துடை நிலையினும்'

(முருகு. 223—226)

ஆலமும், கடம்பும், நல் யாற்று நடுவும்
கால் வழக்கு அறநிலைக் குன்றமும், பிறவும்,
அவ்வவை மேனிய வேறுவேறு பெயரோய்' (பரி-4:67-69)
'துறையும் ஆலமும் தொல்வலி மராஅமும்
முறையுளி பராஅய், பாய்ந்தனர், தொழூஉ'
(கலி. 101:13-14)

என வரும் பாடற்பகுதிகளால் பற்பல இடங்களினிம் மக்கள் பரவிய பல்வேறு கடவுளர்களின் தோற்றங்களைக் காணலாகும்.

மலை உறை தெய்வம்

மேரு மலையில் தேவர்கள் உறைகின்றனர் என்று பாணாற்றுப்படைகளில் தேவர்களைப் பற்றிப் பேசும்போது குறிக்கப்பட்டது (சிறு. 205-206 ; பெரும் 429-430). இம் மேரு மலையில் மட்டும் அன்று தெய்வங்கள் உறைவது; எல்லா மலைகளிலுமே தெய்வங்கள் உறைவதாக நம்பினர். 'அணங்குடை நெடுவரை'(அக. 22: 1); 'அணங்குடைக் கவாஅன்'(அக. 72 :11); வான் கோட்டுக் கடவுள் ஓங்குவரை' (அக. 348 : 6 7) : 'அணங்குடை வரைப்பு' (அக. 372 : 1) ; 'கடுந்திறல் அணங்கின் நெடும் பெருங்குன்றத்து' (அக. 378 : 22) ; 'மலை உறை கடவுள்' (நற். 259 : 3) ; 'அணங்கொடு நின்றது மலை' (நற். 165 : 3) என மலையில் உறையும் தெய்வங்களைக் கவிஞர் சுட்டிச் செல்கின்றனர். இம் மலைத் தெய்வங்கள் மலையைக் காக்கும் பணிபுரிவனவாகும்.

'அருந்தெறல் மரபின் கடவுள் காப்ப,
பெருந்தேன் தூங்கும் நாடுகாண் நனந்தலை,
அணங்குடை வரைப்பன், பாழி ஆங்கண்'
(அக. 372 : 1–3)
'ஈர்ந்தண் சிலம்பின் இருள் தூங்கு நளி முழை
அருந்திறல் கடவுள் காக்கும் உயர்சிமை
பெருங்கல் நாடன் பேகனும் (புற. 158 : 10-12)

என வருவன இதற்குத் தக்க சான்றுகளாம். இங்ஙனம் மலையைக் காவல் புரியும் கடவுள் மக்களை மிகவும் வருத்தும் இயல்புடையனவாயும், மிகுந்த வலிமை படைத்தனவாயும் இருந்தன என்பதை மேற்குறித்த பாடற்பகுதியுள்வரும் 'அருந்தெறல் கடவுள் ; 'அருந்திறல் கடவுள் என வரும் அடைமொழிகளால் உணரலாகும்.

இம்மலையில் உறையும் தெய்வமகளிரை. 'வரையர மகளிர்' என்பர். மலைகளில் தெய்வம் விரும்பும் இடங்கள், பூக்கள், வரையர மகளிரின் இருப்பிடங்கள் ஆகியவை கண்டார்க்கு நடுக்கத்தைச் செய்வனவாக இருந்தன. மலை வழியில்செல்லும் கூத்தர்களுக்கு இவ்வகையான தெய்வங்களின் இருப்பிடங்கள் நடுக்கத்தைத் தருவன ஆதலால் மலை நாட்டில் பல நாள் தங்கியிருத்தல் கூடாது என்று அறிவுறுத்துதலை மலைபடுகடாத்துள் காண்கிறோம்.

'அனையது அன்று அவன் மலைமிசை நாடே
நிரை இதழ்க் குவளைக் கடிவீ தொடினும்,
வரை அர மகளிர் இருக்கை காணினும,
உயிர்செல விரும்பிப் பனித்தலும் உரியிர் ;
பல நாள் நில்லாது நிலநாடு படர்மின்'

(மலைபடு. 188—192)

என்பது கூர்த்தர்க்குக் கூறிய எச்சரிக்கை உரை. வரையர மகளிர் என்பார் மலைக் குகைகளிலே பார்ப்பார் கண்களுக்குத் தென்படாது மறைந்து உறைபவராவர் (அக. 342 : 11—12). இதனால் இவர்கள் காட்சிக்கு அரியராயுள்ளனர் என்பது தெரியவரும். அடைதற்கு எளியளல்லாத தலைவியைச் சுட்டும்போது தலைவன் ஒருவன் இவள் வரையர மகளிர் போல அரியளாயுள்ளாள் என்கிறான். 'வரையர மகளிரின் அரியள்' (ஐங். 191 : 4 ; அக. 342 : 11) என்பது அத்தலைவனின் வாக்கு.

இத் தெய்வ மகளிர் மிகுந்த அழகு படைத்தவர்கள். பெண்களின் சாயலுக்கு இம்மகளிரின் நிறத்தை ஒப்பிடுகின்றனர். 'வரையர மகளிர் புரையும் சாயலள், ஐயள்' (ஐங். 255 : 3-4) என்று தலைவி ஒருத்தி சிறப்பிக்கப்படுகிறாள். இம்மகளிர்கள் மலைகளிலே பரந்து விளையாடுகின்றனர். அப்பொழுது மலைச் சிகரங்களில் உள்ள மலர்கள் தம் அழகு கெட்டு உதிர்ந்து கீழே வந்து விழுந்து பரவிக் கிடக்குமாம். இக்காட்சி பூங்கச்சுகளை விரித்து வைத்தாற் போன்று தென்படுகின்றனவாம். இதனை,

வரை அர மகளிரின் சாஅய், விழைதக,
விண் பொரும் சென்னிக் கிளைஇய காந்தள்
தண் கமழ் அலரி தாஅய், நன்பல

வம்பு விரி களத்தின் கவின்பெறப் பொலிந்த
குன்றுகெழு நாடன் (குறிஞ்சி. 195-199)

என வரும் குறிஞ்சிப்பாட்டு அடிகளிலே காணலாம்.

மலையில் உறையும் தெய்வங்களும் பலவாம். இவற்றைப் பொதுவாக 'அணங்கு' எனக் குறிப்பிடுவர். இரவுக் குறிக்கண் வரும் இயல்புடைய தலைவனை, "நீ இவ்வாறு ஒழுகுதல் தகாது; இப்படி நீ இரவில் வந்தால் இச்சிறுகுடியில் உள்ளார் மலையில் நின்று பலியைக் கொள்ளும் அணங்குகளுள் ஓர் அணங்கோ என்று கருதி அஞ்சுவர்" என்று தலைவியின் தோழி ஒருத்தி தலைவனுக்கு அறிவுறுத்துகிறாள் :

'மணம் கமழ் நாற்றத்த மலை நின்று பலி பெறூஉம்
அணங்கு என அஞ்சுவர் சிறு குடியோரே'
(கலி. 52 : 9 – 10)

என்பது தோழியின் வாக்கு.

மலைவாழ் தெய்வங்களுக்கும் பலியிட்டுக் குன்றவர் வழிபாடு செய்கின்றனர். குன்றவர் தமது சுற்றத்தார்களுடன் கூடி வழிபாடு இயற்றுகின்றனர். கோடையில் முற்றி முதிர்ந்து பழுத்த தேனினும இனிய மாங்கனிகளோடு பலாச்சுளைகளையும் இட்டுத் தேனுடன் கூட்டி, மூங்கில் குழாய்களிலே இட்டு வைத்து முதிர்ந்த பக்குவம் அடைந்த கள்ளினை மலைத் தெய்வத்திற்குப் படைக்கின்றனர். வழிபட்டபின் அந்தக் கள் முதலியவற்றை மகளிர் ஆர உண்டு, தம்மையும் மறந்து கள்ளின் மயக்கத்திலே ஆழ்ந்து இன்புறுகின்றனர்.

'அணங்கொடு நின்றது மலை, வான் கொள்க எனக்
கடவுள் ஓங்கு வரை பேண்மார், வேட்டு எழுந்து,
கிளையொடு மகிழும் குன்ற நாடன்' (நற். 165:3-5)
'தேன் தேர் சுவைய, திரள் அரை, மாஅத்து,
கோடைக்கு ஊழ்த்த, கமழ் நறுந்தீம் கனி,
பயிர்புறப் பலவின் எதிர்ச்சுளை அளைஇ,
இறாலொடு கலந்த, வண்டு மூசு, அரியல்
நெடுங்கண் ஆடு அமைப் பழுநி, கடுந்திறல்
பாப்புக் கடுப்பு அன்ன தோப்பி வாள் கோட்டுக்
கடவுள் ஓங்கு வரைக்கு ஓக்கி, குறவர்
முறித்தழை மகளிர் மடுப்ப, மாந்தி,
அடுக்கல் ஏனல் இரும்புனம் மறந்துழி' (அக. 348 : 2-10)

என்னும் பாடற் பகுதிகள் மலைவாழ் மக்களாகிய குறவர்கள் தம் மகளிருடன் மலையுறை தெய்வத்தை வழிபடும் காட்சியை விவரிக்கின்றன. வரை உறை தெய்வம் மகிழ குரவையாடியும் அவர்கள் போற்றுகின்றனர்.

வரை உறை தெய்வம் உவப்ப, உவந்து
குரவை தழீஇ யாம் ஆட, குரவையுள்
கொண்டுநிலை பாடிக்காண். (கலி. 39 : 27 – 29)

என்பது கலித்தொகை. பாணர், கூத்தர், விறலியர் முதலியோர் யாழை மீட்டியும் குறிஞ்சி என்னும் பண் பாடியும் மலைக் கடவுளைப் பரவும் இயல்பும் தெரிய வருகிறது. நன்னன் சேய் நன்னது மலை வழிச் செல்லும் கூத்தர்க்குக் கூறும் வழிச் செலவிலே மலையில் அவர்கள் தெய்வம் பரவிச் செல்லுமாறு அறிவுறுத்தப்படுகின்றனர்.

செரு மிக்குப் புகலும் திருஆர் மார்பன்
உரும் உரறு கருவிய பெருமலை பிற்பட,
இறும்பூது கருவிய இன்குரல் விறலியர்
நறுங் கார் அடுக்கத்துக் குறிஞ்சி பாடி,
கைதொழூஉப் பரவி, பழிச்சினிர் கழிமின
(மலைபடு. 356 – 360)

என்னு கூத்தர்க்கு மலை வழியில் ஆற்ற வேண்டும் கடமை கூறப்படுகிறது.

காடு உறை கடவுள்

மலை மட்டுமா கடவுள் உறைவிடங்கள்? காடும், சிறு காடும், சிறுகாடும், பெருவழிகளும் எங்கணுமே கடவுளர்கள்!

காடே கடவுள் மேன; புறவே
ஒள் இழை மகளிரொடு மன்னர் மேன;
ஆறே அவ் அனைத்து (பதிற். 13: 20—22)

என்பது பதிற்றுப் பத்து. இப்பகுதிக்கு, "நின் நாட்டுப் பெருங் காடான இடங்கள் எல்லாம் கோயில்களாயின; சிறுகாடான இடங்கள் நின் படையாளர்கள் மகளிரொடு உறையும் படை நிலைகளாயின. காடும் புறவும் அல்லாத பெருவழிகளும், ஆறலை கள்வரும் பிற இடையூறுமின்றி முன் சொன்ன கடவுளும் மன்னரும் உறையும் இடமாயின" என்று விளக்கம் தருகின்றார் பழைய உரையாசிரியர். காட்டில் தங்கும்

கடவுளர்களையும் மக்கள் வழிபடுகின்றனர். தன் பாடினி பாடிய தாளத்திற்குப் பொருந்த யாழில் இசைத்துப் பாணன் காட்டுத் தெய்வங்களுக்குச் செய்யும் கடமை செய்து மேற் செல்லுகிறான்.

பெடை மயில் உருவின் பெருந்தகு பாடினி
பாடினி பாணிக்கு ஏற்ப, நாள்தொறும்
களிறு வழங்கு அதிர கானத்து அல்கி
இலைஇல் மராஅத்த, எவ்வம் தாங்கி,
வலை வலந்தன்ன மெல் நிழல் மருங்கில்,
காடு உறை கடவுட் கடன் கழிப்பிய பின்றை
(பொருந. 47-52)

எனவரும் பொருநராற்றுப்படை அடிகளிலே பாணன் நாள் தொறும் காட்டிடத்துச் செல்லுங்கால், ஆங்கு உறையும் கடவுளுக்குச் செய்த வழிபாட்டு முறையைக் காணலாம்.

காவிலும் மரங்களிலும் வாழும் தெய்வம்

காட்டில் உறையும் கடவுள் மரஞ்செடி கொடிகளிலும் மலர் மண்டிக் கிடக்கும் சோலைகளிலும் உறைதல் வியப்பன்று. 'காடும் காவும் கவின் பெறு துருத்தியும்' (முருகு. 223) தெய்வம் உறையும் இடங்கள் என்பர் நக்கீரர். மரங்களில் அதுவும் மரங் களின் அரைகளில், அதாவது அடி மரங்களிலும் கடவுள் சேர்ந் திருப்பதாகக் கண்டனர். 'கடவுள் மரத்த முள்மிடை குடம்பை' (அக, 270:12), 'நல் அரை மராஅத்த கடவுள்' (மலைபடு. 395), 'தொன்று உறை கடவுள் சேர்ந்த பராரை மன்றப் பெண்ணை, (நற். 300 : 3—4), 'தெய்வம் சேர்ந்த பராரை வேம்பில்' (அக. 309 : 4) என்று குறிப்பிடுதல் காணலாம். முக்கியமாக, ஆலமரம் (குறுந். 15 : 1 — 2 ; நற். 343 : 3— 6 ; புற. 199 : 1 ; கலி. 101 : 13—14 : 106 : 28—29), மராமரம் (குறுந். 87 : 1—2 ; மலைபடு. 395 ; கலி. 101 : 13), கடம்பு (பதிற். 88 : 6 ; கலி. 106 : 28) ; வேங்கை (நற். 216 : 6—7), ஓமை (அக. 297 : 11), வேப்பு (அக. 309 : 4 — 6) மருது (பெரும். 232) : பனை (நற். 303 : 3— 4), கள்ளி (புற. 260 : 5) என்னும் மரங்களில் கடவுள் உறைதல் குறிப்பிடப்பட்டுள்ளது. வெற்றிமடந்தை யாகிய கடவுள் வாகை மரத்தில் வாழ்கின்றனளாம் ; வாகைப்பூ போர் வெற்றியைக் குறிக்கும் அடையாளம். ஆகவே, போர் வெற்றி தரும் கொற்றவையை வாகையில் உறையும் கடவுளாகக் கொண்டுள்ளனர் என்பது தெரியவருகிறது

'கடவுள் வாகைத்துய் வீ' (பதிற். 66 : 15) என்பதற்கு "வெற்றி மடந்தையாகிய கடவுள் வாழும் வாகை" என்று பொருள் காண்கின்றார் பழைய உரைகாரர்.

மரங்களில் உறையும் கடவுள் பிறர்க்கு அச்சம் செய்தலில் முதிர்ந்த இயல்புடையதாம். 'மன்ற மராஅத்த பேஎம் முதிர் கடவுள்' (குறுந். 87 : 1) என்னும் தொடர் இதனை அறிவுறுத்தும். இம் மரங்களில் உறையும் தெய்வங்களுக்கு மகிழ்ச்சி உண்டாக வேண்டி நெடிய மாலைகளை அம்மரக் கொம்புகளிலே தொங்கவிடுவர் என்றும் தெரியவருகிறது. ஏறு தழுவச் சென்ற ஆயர் சிலரின் குடர்களைத் தம் கொம்பு களினாலே தோண்டியெடுத்து ஓடுகின்றன சில காளைகள். இந்தக் குடர்களைக் கௌவி எடுத்துப் பறக்கும் பருந்தின் வாயினின்றும் நழுவி ஆலமரம், கடப்ப மரம் ஆகியவற்றின் மேலும் குடர்கள் சிலபல வந்து விழுகின்றன. குடர்மாலைகள் தொங்கக் காட்சி தரும் ஆலமரமும் கடப்ப மரமும் அவற்றின் கண் உறையும் தெய்வத்தின் பொருட்டுச் சாத்தப் பெற்ற மாலைகள் போல உள்ளனவாம் (கலி. 106 : 26—29). மரங்களில் உறையும் கடவுளுக்கு அம்மரங்களின் அடியில் பலிசோறு இடுதலும், பிற பலிகளைக் கொடுத்தலும் உண்டு. பலியாக இட்ட சோற்றைக் காக்கைகள் தம் இனத்துடன் உண்டு உவக் கின்றன. ஆட்டுமறியை வெட்டி, அதன் குருதியைத் தூவி ஆக்கிய பலிச் சோற்றை வழிபட்டார் உண்ணுகின்றனர்.

'நெடுவீழ் இட்ட கடவுள் ஆலத்து,
உகுபலி அருந்திய தொகுவிரற் காக்கை
புன்கண் அந்தி கிளையின் செறிய' (நற். 343:46)
'தெய்வம் சேர்ந்த பராரை வேம்பில்
கொழுப்பு ஆ எறிந்து, குருதி தூஉய்,
புலவுப் புழுக்கு உண்ட வான்கண் அகல்அறை'
(அக. 309 : 4-6)

என வரும் சங்கப் பாடற்பகுதிகளால் மேற்குறித்த செய்திகள் புலனாகும்.

நீர்த்துறைக் கடவுள்

நீர் நிலைபெற்றுள்ள சுனை, குளம், ஆறு, ஆற்றுத்துருத்தி, கடல் கழிமுகம் என்பவற்றிலும் கடவுள் உறைவதாக வழி பட்டனமயும் சங்கப் பாடல்களில் காணலாம். 'உண்துறை

அணங்கு இவள்' (ஐங். 28 : 1), 'துறை எவன் அணங்கும்' (ஐங். 53 : 1) 'அருந்திறற் கடவுள் அல்லன்-பெருந்துறைக் கண்டு இவள் அணங்கியோனே' (ஐங். 182 : 3-4) எனவரும் ஐங்குறுநூற்று அடிகள் மகளிரை வருத்தும் நீர்துறைத் தெய்வங்களைச் சுட்டிக் காட்டுகின்றன. 'கடவுட் கற்சுனை' (நற். 34 : 1), 'சூர்ச் சுனை' (அக. 91 : 4) என்பன சுனை உறை தெய்வத்தைக் குறிக்கும். ஆற்றின் நடுவில் அமைந்துள்ள துருத்தி எனப்படும் திட்டுகளிலும் தெய்வம் காண்கின்றனர். 'நல் யாற்று நடுவும்' (பரி. 4 : 67), 'கவின் பெறு துருத்தியும்' (முருகு. 223) என்று பரிபாடலும் முருகாற்றுப்படையும் துருத்தியில் தெய்வம் உறைதலைச் சுட்டும். ஆறு கடலொடு கலக்கும் நீர்ச் சுழிகள் நிறைந்த கழிமுகத்திலும் கூட ஒரு தெய்வம் உறைகின்றது. தெய்வம் சுட்டி ஆணையிடும் தோழி செவிலித்தாயை நோக்கி,

'கொடுஞ்சுழிப் புகாஅர்த் தெய்வம் நோக்கி,
கடுஞ்சூழ் தருகுவன், நினக்கே' (அக. 110 : 4-5)

என்று கழிமுகத்துறைத் தெய்வத்தின் மேல் ஆணையிட்டுப் பேசுகிறாள்.

எல்லா நீர்களையும் ஏற்கும் பெரிய கடற்பரப்பில் உறையும் தெய்வம் நீர்த் தெய்வங்களிலே மிகப் பெரிதும் போற்றி வணங்கப்படுகிறது. இப் பெருங் கடல் தெய்வத்தின்மேல் ஆணையிட்டுக் கூறுதலும் உண்டு.

'பெருங்கடற் தெய்வம் நீர்நோக்கித் தெளித்து, என்
திருந்திழை மென்தோள் மணந்தவன்' (கலி. 131 : 1-2)

என்பது தலைவி ஒருத்தியின் வாக்கு. 'அணங்குடை முந்நீர்' (அக. 220 : 1) 'பெருந்துறைப் பரப்பின் அமர்ந்து உறை அணங்கோ?' (நற். 155 : 5-6), 'கடல் கெழு செல்வி' (அக. 370 : 12) என்பன எல்லாம் கடல்-தெய்வத்தைக் குறிக்கும். கடல் கெழு செல்வி ஞாழல் பூவால் அமைந்த கண்ணியையும், நெய்தல் பூவாலாகிய மாலையையும் அணிந்து விளங்குகின்றாளாம். —ஞாழல்

வண்டுபடத் ததைந்த கண்ணி, நெய்தல்
தண்நறும் பைந்தார் துயல்வர, அந்தி,
கடல்கெழு செல்வி கரை நின்றாங்கு' (அக. 270:9-12)

என்பது அகநானூறு தரும் கடல்தெய்வக் காட்சி இச் செல்வியை நெய்தல் நில மாக்கள் போற்றி வழிபடுகின்றனர்.

தாய் தன் தோழியருடன் குளிர்ச்சி மிக்க கடல் துறையிலே வாழும் தெய்வத்தை வழிபடுதலைக் குறித்து நெய்தல் நிலத் தலைவி ஒருத்தி,

'அணங்குடைப் பனித்துறை கைதொழுது ஏத்தி,
யாயும் ஆயமோடு அயரும்' (அக. 240 : 8-9)

என்று கூறுகின்றாள். கொற்கைத் துறையிலே நெய்தல் நில மகளிர் பனித்துறைக் கடவுளுக்கு முத்தும், வலம்புரிச் சங்கு முதலியனவும் சொரிந்து வழிபாடு இயற்றும் காட்சியையும் அகநானூறு தருகிறது.

'வினைநவில் யானை விறற்போர்ப் பாண்டியன்
புகழ்மலி சிறப்பின் கொற்கை முன்துறை
அவிர்கதிர் முத்தமொடு வலம்புரி சொரிந்து,
தழை அணிப் பொலிந்த கோடு ஏந்து அல்குல்
மழையர் மகளிர் பனித்துறை பரவ' (அக. 201 3-7)

என்பது அகநானூறு. தமிழ்நாட்டு மன்னர்களும் கடல் தெய்வத்திற்கு விழா எடுத்து, மிகவும் சிறப்புற வழிபட்டிருக்கின்றனர். பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி முந்நீர்க் கடல் தெய்வத்திற்கு எடுத்த விழாவைக் குறிப்பிட்டு

'முந்நீர் விழவின் நெடியோன்' (புற. 9 : 10)

என்று புகழப்பட்டுள்ளான்.

மலை, மரங்களில் உறையும் கடவுளர்களுக்கு மறி பலியிட்டு, கள், கண்ணி முதலியவற்றைக் காணிக்கையாகச் செலுத்துதல் போலவே நீருறையும் கடவுளுக்கும் வழிபாடு செய்யும் வழக்கமும் தெரியவருகிறது. இதனை,

'கள்ளும் கண்ணியும் கையுறை யாக
நிலைக்கோட்டு வெள்ளை நால் செவிக் கிடாஅய்
நிலைத்துறைக் கடவுட்கு உளப்பட ஓச்சி'
(அக. 156 : 13—15)

எனவரும் அகநானூற்றுப் பாடற்பகுதியில் காணலாகும்.

வருத்தும் தெய்வம்

(அணங்கும் சூரும்)

மலை, மரம், நீர் ஆகியவற்றில் உறையும் தெய்வங்களில் பெரும்பாலனவும் வருத்தும் தெய்வங்களேயாம். அச்சமும்

வருத்தமும் விளைவிக்கும் காரணம் பற்றி இத்தெய்வங்களை 'அணங்கு' என்றும், 'சூர்' என்றும் குறிப்பிடுகின்றனர். இவற்றுள் அணங்கு என்பது தெய்வத்தைக் குறிக்கும் பொதுப்பெயராகவும் வழங்கப்பட்டிருக்கிறது. 'இன் சீர்க், கின்னரம் முரலும் அணங்குடைச் சாரல்' (பெரும். 493 –494), 'அணங்கு வீழ்வு அன்ன பூந்தொடி மகளிர்' (மதுரை. 446), 'எம் அணங்கு அன்னோளே' (அக. 366 : 16) எனவரும் இடங்கள் தெய்வம் என்னும் பொதுமைப் பொருள் தருவன. ஆகவே, மக்களைத் தீண்டி வருத்தும் இயல்புடைய அணங்குகளைத் 'தாக்கு அணங்கு' என்று கவிஞர்கள் குறிப்பிடுகின்றனர்.

'கண்டார்க்குத் தாக்கு அணங்கு இக்காரிகை காண்மின்!'
(பரி. 11 : 122)

'தாக்கு அணங்கு ஆவது எவன்கொல் அன்னாய்!'
(ஐங். 23 : 4)

'மூப்புடை முதுபதி தாக்கு அணங்கு உடைய;
காப்பும் பூண்டிசின், கடையும் போகலை!
(அக. 7 : 4—5)

இங்கே வரும் பாடற்பகுதிகள் தாக்கு அணங்கின் இயல்பினைப் புலப்படுத்துவதாயுள்ளன. தாக்கு அணங்கு தம்மை எதிர்ப்பட்டவர்களைத் தாக்கும் என்பதும் சிறப்பாகக் கன்னி மகளிரைத் தீண்டித் துன்புறுத்தும் என்பதும் புலனாகும்.

அணங்கைப் போலவே வருத்தும் தெய்வம் சூர் என்பதும், மலை நாட்டில் உள்ள வழிகளில் செல்லுதற்கு அருமை பற்றி விளக்கவந்த இடத்தில் அங்குச் செல்வார்க்குக் கொடுமை செய்யும் 'சூரை' யும் உடன் கூறுகிறது குறிஞ்சிப்பாட்டு.

'உருமும், சூரும், இரைதேர் அரவமும்,
... ...
வழுவின் வழாஅ விழுமம், அவர்
குழுமலை விடரகம், உடையவால் எனவே'
(குறிஞ்சி. 255-261)

இவை பிறரைக் கொன்று ஒறுக்கும் இன்னாச் செயலில் நின்று நீங்கா இயல்புடையனவாகும், இங்கே 'சூரும்' என்பதற்கு, 'கொடுந்தெய்வமும். என்று விளக்கம் தருகின்றார் நச்சினார்க்கினியர். சூர் குடிகொண்டிருக்கும் மலைத்தழையைத் தீண்டினும், வாடச் செய்யினும் அது வருத்துமாம். அதனால்

தழை தின்னும் வரையாடுகள் கூட சூர் இருக்கும் மலைத் தழையைத் தொடாது ஒதுங்குகின்றனவாம்.

'வாடல் கொல்லோ தாமே—அவன் மலைப்
போருடை வருடையும் பாயா,
சூருடை அடுக்கத்த கொயற்கு அருந் தழையே?'
(நற். 359 : 7-9)

என்பது நற்றிணை. 'சூர்ப்பணிப்பு அன்ன தண்வரல் ஆலியொடு' (அக. 304 : 3) என்பதனால், இச் சூரி நடுங்கச் செய்யும் இயல்பு புலனாம். 'தாக்கு அணங்கு' என்றாற் போல, இங்கே 'சூர்ப்பணிப்பு' என்று அதன் வருத்தும் இயல்பு உரைக்கப்பட்டுள்ளமை காணலாம்.

கொடுமை செய்யும் தெய்வமகளிர் 'சூர் மகள்' 'சூரர மகளிர்' எனப்படுவர். தலைவன் ஒருவன், தலைவி கிட்டுதற்கு அரிய நிலையினளாயும், அவள் தன்னை அடுந்தவழி வருத்தும் இயல்பினளாயும் உள்ளாள் என்பதைக் குறிக்குமிடத்துச் சூரர மகளிரோடு அவளை ஒப்புக் கூறி, அத் தெய்வ மகளிர் போன்ற இயல்பினளாகின்றாள் தலைவி என்று பேசுகிறான்.

'நேர்கொள் நெடுவரைக் கவாஅன்
சூரர மகளிரின்பெறற்கு அரியோளே' (அக. 162 : 24-25)
சூரர மகளிரின் நின்ற நீ மற்று
யாரையோ? எம் அணங்கியோய்! உண்கு'
(அக. 32 : 7-8)

என்பன தலைவன் தலைவியை நோக்கி மொழிந்தவை. சூரர மகளிரை முன்னிட்டு ஆணையிட்டு உரைத்தலும் உண்டு.

எக்கர் நண்ணிய எம்ஊர் வியன்துறை,
நேர்இறை முன்கை பற்றி,
சூரர மகளிரொடு உற்ற சூளே' (குறுந் 53 : 5–7)

எனத் தலைவன் ஒருவன் தலைவி ஒருத்தியின் முன்கையைப் பற்றிச் சூரர மகளிரின்மேல் ஆணையிட்டு உரைத்த உறுதி மொழிகள் எடுத்துக்காட்டப்படுகின்றன. மலையிலன்றி மலையிடத்துள்ள சுனைகளிலும் சூர்மகளிர் உறைகின்றனராம். ஆய் நாட்டுள்ள கவிரமலைச் சுனை வாழும் சூர்மகளை அகநானூற்றுப்பாடல் ஒன்றில் காண்கிறோம்.

ஆஅய் நல்நாட்டு அணங்குடைச் சிலம்பில்,
கவிரம் பெயரிய உருகெழு கவாஅன்
ஏர்மலர் நிறைசுனை உறையும்
சூர்மகள் மாதோ என்னும்—என் நெஞ்சே !
(அக. 197 : 14—17)

சூரரமகளிர் நீலநிறம் வாய்ந்த குவளை மலரையும் இரத்தம் போன்று சிவந்த நிறமுள்ள செங்காந்தள் மலரையும் கட்டி அணிந்துகொண்டு மலையிடங்களில் ஆடுவார்களாம். அவர்களுக்கு அங்கு இயற்கையில் அமைந்து ஒழுகும் அருவி விழும் ஓசையே இன்னிய ஓசையாக அமைகின்றதாம். இதனைப் புலப்படுத்தும் செய்யுட் பகுதி பின்வருமாறு :-

'கடவுட் கடற்சுனை அடை இறந்து அவிழ்ந்த
பறியாக் குவளை மலரொடு காந்தட்
குருதி ஒண்பூ உருகெழக் கட்டி,
பெருவரை அடுக்கம் பொற்பச் சூர்மகள்
அருவி இன்இயத்து ஆடும் நாடன்.' (நற். 34 : 1—5)

இச்சூரரமகளிர் பலரும் கூடிப்பாடி மலையிடமெல்லாம் ஆரவாரிக்கும்படி சோலையில் அவர்கள் ஆடுகின்ற பான்மையைத் திருமுருகாற்றுப்படை விவரித்துள்ளது. இப் பகுதியில் சூரரமகளிரின் தோற்றம் முதலியனவும் நன்கு வருணிக்கப்பட்டுள்ளன. இம்மகளிர் கை புனைந்து இயற்றா இயற்கை வனப்புடன் திகழ்கின்றனர். இந்திர கோபத்தை ஒத்த செந்நிறம் வாய்ந்த துகிலினை அணிந்துள்ளனர். நாவலம் பசும் பொன்னால் ஆன ஆபரணங்களையும் அவர்கள் அணிந்து விளங்குகின்றார்கள். அவர்களின் அசையிலே மேகலாபரணங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. கால்களிலே சதங்கை அணிந்திருக் கின்றனர். இவர்கள் சிறிய பாதமுடையர் ; திரண்ட கணைக் காலினர் ; வளைந்து நுடங்கும் இடையினை உடையர் ; பருத்த தோளினை உடையர் ; இவர்கள் மேனியொளியே வானுலகை யும் கடந்து செல்லும் தகையன. தெய்வ நலம் வாய்ந்த இவர் ஆடையணிகளுடன் விளங்கும் காட்சி ஒரு கண் கொள்ளாக் காட்சியாகும். இப்பொழுது நக்கீரர் தரும் சொற்சித்திரத்தைக் காண்போம்.

மால் வரை நிவந்த சேண் உயர் வெற்பில்
கிண்கிணி கவைஇய ஒண்செஞ் சீறடி,
கணைக் கால், வாங்கிய நுசுப்பின், பணைத்தோள்,
கோபத்து அன்ன தோயாப் பூந்துகில்,

பல் காசு நிரைத்த சில்காழ் அல்குல்,
கைபுனைந்து இயற்றாக் கவின்பெறு வனப்பின்,
நாவலொடு பெயரிய பொலம்புனை அவிர்இழை,
சேண் இகந்து விளங்கும் செயிர்தீர் மேனி—
... ...
சூரர மகளிர் ஆடும் சோலை, (முருகு. 12—41)

அணங்கு, சூர் என்னும் தெய்வங்களின் ஆவேசம் வரப் பெற்றார் துள்ளித்துள்ளி ஆடுவர். துள்ளிச் செல்லும் ஆனிரைக்குத் தெய்வம் மெய்யின்கண் ஏறிய புலைமகளை ஒப்பிடுகின்றார் ஒரு கவிஞர். 'முருகு மெய்ப்பட்ட புலைத்தி போல, தாவுபு தெறிக்கும் ஆன்' (புற. 259:5-6) என்பது கவிஞர் வாக்கு. 'சூர் நசைந்தனையாய் நடுங்கல் கண்டே' (குறுந்.52:2) என்பதும், சூரினால் விரும்பிப் பற்றப்பட்டால் நடுக்கம் எய்தும் என்பது, 'சூர் உறு மஞ்ஞையின் நடுங்க' (குறிஞ்சி—169) என வரும் குறிஞ்சிப்பாட்டு அடியால் போதரும். தெய்வத்திற்குரிய பொருளைத் தீண்டியவரும் இவ்வகை நடுக்கத்திற்கு உள்ளாகின்றனர். கடவுட்கு எனப் பலியாக இடப்பட்ட தினைக் கதிரைத் தெரியாமல் உண்ட மயில் வெறியாடும் மகளைப் போல நடுங்குகின்ற காட்சியைக் குறுந்தொகைப் பாடல் ஒன்றில் காண்கிறோம்.

'புனவன் துடவைப் பொன்போல் சிறுதினைக்
கடி உண் கடவுட்கு இட்ட செழுங்குரல்
அறியாது உண்ட மஞ்ஞை, ஆடுமகள்
வெறிஉறு வனப்பின் வெய்துற்று, நடுங்கும்
சூர்மலை நாடன்' (குறுந். 105 : 1-5)

என்பதுவே அக்குறுந்தொகைப் பாட்டு, வெறியாட்டத்திலும் கட்டுக் கழங்குக் குறிபார்த்தலிலும் வேலனும் தேவராட்டியும் தெய்வ ஆவேசம் உற்று ஆடுதலும் ஈண்டுக் கவனிக்கத் தக்கது.

யாழ்த் தெய்வமும் முலை உறை வீற்றுத் தெய்வமும்

அணங்கு என்பது ஆண் பெண் தெய்வங்களுக்குப் பொதுவாகவும், ஆண் தெய்வத்திற்குச் சிறுபான்மையும் பெண் தெய்வத்திற்குப் பெரும்பான்மையாகவும் சங்கப்பாடல்களில் வழங்கப்பட்டிருக்கின்றது. பெண்களையே 'அணங்கு' எனச் சுட்டும் வழக்கம் காணப்படுகிறது. சூர் என்பதும் இவ்வகையாக வரினும், பெண் தெய்வத்தைக் குறிக்கும்பொழுது சூர்

மகள், சூரரமகளிர் என்று சிறப்பித்துப் பேசப்படுகின்றனர். யாழ், முரசு முதலிய கருவிகளில் உறையும் தெய்வமும் அணங்கு எனவே குறிக்கப்பட்டிருக்கிறது.

'மணம்கமழ் மாதரை மண்ணி யன்ன
அணங்கு மெய்ந்நின்ற அமைவரு காட்சி,
ஆறுஅலை கள்வர் படைவிட அருளின்
மாறுதலை பெயர்க்கும் மருவுஇன் பாலை'
(பொருந. 19-22)

என்று பொருநன் கையில் ஏந்திச் செல்லும் பாலை யாழைப் பொருநராற்றுப்படை வருணிக்கிறது. இங்கே அணங்கு என்பது யாழிற்குரிய தெய்வத்தைக் குறிப்பதாகும். யாழிற்கு உரிய தெய்வத்தை 'மாதங்கி' என்று நச்சினார்க்கினியர் சீவகசிந்தாமணி உரையில் குறிப்பிட்டுள்ளார் (சீவ. 411, 500 ந.)

மகளிர் முலையிடையே வாழ்கின்ற அணங்கு 'வீற்றுத் தெய்வம்' என்று குறிக்கப்படும்.

'சுணங்கு சூழ் ஆகத்து அணங்கு என உருத்த
நல்வரல் இளமுலை (அக. 161 : 12-13)
'பொரிப்பூம் புன்கின் அழல்தகை ஒண்முறி
சுணங்குஅணி வனமுலை அணங்குகொளத் திமிரி'
(நற். 9 : 5-6)

எனவரும் பாடற்பகுதிகள் முலை உறை வீற்றுத் தெய்வத்தைக் குறிப்பிடுதல் காணலாம். இதனை, 'முலை வாழ்திரு' என்றும் குறித்தல் உண்டு.

(தொடரும்)

கரந்தைத் தமிழ்ச்சங்கச் சமணச் சிற்பம்

டாக்டர். சி. கோ. தெய்வநாயகம் பி.எச்.டி,

சமணச்சிற்பம்

தமிழகச் சிற்பவியல் குறித்த ஆய்வில் மிகுந்தசிக்கலான தெளிவான கருத்துப் பெறவியலாத அளவிற்கு வடிவாக்கத்தில் அழகும், புதுமையும், பழமையும் கொண்டு விளங்குகின்ற சிற்பங்களுள் சமண-பெளத்த சமயச் சிற்பங்கள் பெரும் பங்கேற்கின்றன. அவற்றுளளும் மிகுந்த சிக்கலுக்கு இட னளிக்கின்ற சமணச் சிற்பம் ஒன்று கரந்தைத் தமிழ்ச் சங்கத்திற்குச் சுமார் நாற்பதாண்டுகட்கு முன்னர்க் கல்வெட்டறிஞர் திரு. சி. கோவிந்தராசனரால் அளிக்கப்பட்டு உடைமையாக்கப்பட்டுள்ளது.

2¼ அடி உயரமும் 1¼அடி அகலமும் கொண்டுள்ள இச்சிற்பத்துண்டு புடைப்புச் சிற்பமாகக் காணப்படுகிறது; கருநிறராசிக் கருங்கல்லால் ஆனது. தீர்த்தங்கரச் சிற்பமாகக் காணப்படுகின்ற இச்சிற்பம் பக்திக்காலமாகிய கி.பி. 6,7, ஆம் நூற்றாண்டுகளில் சைவவைணவ சமயத்தாரால் சமண வழிபாட்டிடங்கள் அழிக்கப்பட்டபோது சிதைவுற்று வெளிக் கிடத்தப்பட்டதாதல் வேண்டும்.

சம்மணம் கூட்டிப் பத்மாசனமாக அமர்ந்த கோலத்தில் வடிவம் அமைந்துள்ளது. திக்குகளையே ஆடையாகப் பூண்டு திகம்பர அறவோர்களாக விளங்கிய தீர்த்தங்கரர் வடிவமே இது. உந்திக்குங் கீழாக வலக்கையின் அகங்கை இடக்கையின் விரிந்த அகங்கையின் மேலாக மேனோக்கிய காட்சியில் அமைக்க அறநிலையாசனத்திறம் இச்சிற்ப அமைதியில் விளங்குகிறது,

இச்சிற்பத்தில் அமைந்துள்ள சிற்பக்கலை நுட்பங்களுள் விடைகாணவியலா விந்தைவடிவாக்கம் தலைப்பகுதியேயாம், தலையில் புத்தக்கோலத்தில் விளங்கிடும் அருள்வடிவக்கற்றைத் தலைமுடியமைப்புச் செதுக்கப்பட்டுள்ளது. பெரும்பான்மை முடியற்ற நிலையிலேயே காணக்கூடிய இத்தீர்த்தங்கரர்ச் சிலைகளின் வடிவாக்கத்தில் இத்தகு வடிவாக்கங்களைப் புத்த வடிவாக்கக் கலைச்சாயலாலேயே பிற்காலத்தில் எழுந் திருத்தல் வேண்டும் என்பது துணிபு.

இம்முடிக்குரிய கற்றைச் சுருள்வடிவுகளுள்
“மழித்தலும் நீட்டலும் வேண்டா”

என்ற குறளைச் சான்றாகக் கொள்ளலும் பொருந்தும் எனலாம்.

முடிக்கு மேலாக முக்குடையமைப்புக் காணப்படுகிறது. சந்திராதித்யம், நித்யவிநோதம், சகலபாசனம் என்ற இம் முக்குடையமைப்புத் தீர்த்தங்கரரது மேன்மையினைச் சுட்டும் அரிய சான்றாகும்.

அருளொழுகும் வட்டமதியினையொத்த முகத்தில் காணப்பெறும் கருணைக் கண்களும் தோளளவு வளர்ந்த செவிகளும் எடுத்த நாசியும் கூன்பிறைச் சிறுநுதலும், அழகிய தாழ்வாயும் சமணத்துறவின் சிறப்புச் சின்னங்களாக விளங்குகின்றன.

அழகிய கழுத்தினை அடுத்துக் காணப்படும் அகன்ற மார்பும், ஒடுங்கிய வயிறும், பக்கவாட்டில் பொலிவுடன் திகழும் புயங்களும், மெல்லிய உடலும் நோன்பினையும், அறிவாற்றலை யும் வெளிப்படுத்துகின்றன. பாதங்களின் மீது படிந்து காணப்படும் மெலிந்த துறவுக்கரங்களையும் இச்சிற்பம் அழகுறப் பெற்றுள்ளது.

உண்ணா நோன்பின் உறவு கொண்ட காட்சி எனக் கால்களும் மெலிந்தே காணப்படுகின்றன. உருவத் தோற்றத்தின் இருபுறங்களிலும் காணப்படும் கொடிக்கருக்கு வேலைப்பாடு கருதத்தக்க சிற்பநுட்பம் வாய்ந்ததாகும். வலது பக்கத்தின் கீழ்ப்புறத்தே முதலை வடிவம் காணப்படுதலால் இத்தீர்த்தங்கள் வடிவத்தினைத் தீர்த்தங்கரர் என்று துணியலாகும்.

தமிழகத்தின் ஜிநாலயங்களில் காணப்படும் (இன்றைய வரையில்) மூலவர் திருவுருங்கள் தீர்த்தங்கரர் திருமேனிகளே. அத்திருமேனிகள் அனைத்தும் புடைப்புச் சிற்பங்களாகவே காணப்படுகின்றன. இத்தகைய புடைப்புச் சிற்பங்களுள் ஒன்றாகவே இத்தமிழ்ச் சங்கத் தீர்த்தங்கரர்ச் சிற்பமும் காணப்படுகிறது.

தமிழகமெங்கும் ஆங்காங்கே சிதைந்த நிலையில் புதைந்தும் மறைந்தும் காணப்படுகின்ற தீர்த்தங்கரர்ச் சிற்பங்கள் யாவும் இத்தகைய மூலவர் திருமேனிகளே என்பது உண்மை. இவ்வுண்மையினை நுணுகி நோக்கிச் சிந்திக்கின்றபோது இன்றைய வரையில் கண்டெடுக்கப்பட்டுள்ள சமண

தீர்த்தங்கரர் சிற்பங்கள் எத்துணையோ சற்றேறத்தாழ அத்துணை சமண ஜிநாலயங்கள் தமிழகத்தில் கி. பி. 5, 6 ஆம் நூற்றாண்டு வரையில் இருந்தமையினை அறியமுடிகின்றது.

சமணப்பள்ளியினை இடித்துச் சிவாலயமாகக் குணபர ஈச்சரம் கண்ட மகேந்திரபல்லவன் காலமுதலாகவே ஜிநாலயங்கள் அனைத்தும் சிவாலயங்களாக மாற்றப் பட்டுள்ளன. இந்நிலையில் ஜிநாலயங்களின் மூலவர் திருமேனிகள் வெளியேற்றப்பட்டுள்ளன. சமூக வன்மையில் நலிவுற்ற சமணம் கவனிப்பாரற்ற நிலையில் சீர் குன்றியிருந்த நிலையில் பிற ஆக்கச் செயற்கான எழுச்சி பெறாநிலையில் மங்கியழிந்துள்ளது. பிற்காலச் சோழர் ஆட்சிக்காலத்தின் பொற்காலமெனத் திகழ்ந்த முதல் இராசராசன் இராசேந்திர சோழன் ஆகியோரது காலஅளவில் மறுமலர்ச்சி பெற்ற சமணத்தின் அறிகுறிகள், ஜிநாலயங்களாகத் தோன்றி மீண்டும் காலவெள்ளத்தின் நோக்கில் சீர்மை குன்றிய நிலையில் காணப்படுவதே இன்றைய நிலையில் காணப்படும் ஜிநாலயங்கள் எனலாம்.

சமூக நலிவால் வெளியேற்றப்பட்டுச் சிதைவுற்ற பல சமணமூலவர் திருமேனிகள் சைவ, வைணவ மதத்தில் சார்பு நிலைத் தெய்வங்களாக வடிவமாற்றம் செய்யப் பெற்ற நிலையில் தமிழகத்தின் பல்வேறு சைவ வைணவக் கோயில்களில் காணப்படும் தெய்வமாடங்களை நுணுகி நோக்குமிடத்து விளங்குகின்றது. அதிலும் குறிப்பாகத் தஞ்சை மாவட்டத்தில் இத்தகைய வடிவுமாற்றச் சிற்பங்கள் சோழர்காலக் கோயில்களின் தெய்வமாடங்களில் நிரம்பிக்காணப்படுகின்றன.

இத்தகைய வடிவு மாற்றத்திற்குக் கீழ்வரும் காரணங்களைச் சிந்திக்கமுடிகிறது.

1. தஞ்சையில் கருங்கற்கள் கிடைத்திடா அருமை
2. சிதைவுற்ற கற்களை வேற்றுருப்படுத்தும் மரபு
3. புறச்சமையச் சான்றுகளை மாற்றும் எண்ணம்
4. அழிந்தும் மறைந்தும்போகும் நிலையில் இருக்கும் சமய வரலாற்றுச் சின்னங்களைக் கற்றுண்டுகளாகக் கருதித் தம் கோயிற்திருப்பணிகளுக்குப் பயன்படுத்தும் தமிழகச் சிற்பியரின் தொழில் நிலை. முதலியனவே யாகும்.

இவ்வாறு கிடைத்திட்ட தீர்த்தங்கரர் சிலைகளுள் ஒன்றாகவே காணப்படும், இக்கரந்தைத் தமிழ்ச்சங்கத் திருமேனியின் காலத்தினை நோக்குமிடத்து கி. பி. 4 ஆம் நூற்றாண்டினைச் சார்ந்ததாகக் கருத நிரம்ப இடனுண்டு. காலத்தின் கோலத்தில் கோயிலில் இடிந்து, சிதைவுற்று மாற்றுருவாக்கத்தில் தப்பிய நிலையில் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் பிள்ளையார் கோயிலின் கருவறைப்புறத் தென்புறச் சுவரில் சார்த்தி வைக்கப்பட்டிருந்து தற்போது தமிழக அரசின் தஞ்சை இராசராசன் காட்சியகத்துள் இடம் பெற்றுள்ள இத்தீர்த்தங்கரச்சிலை கீழ்வரும் குறளை நினைவு படுத்துவதுபோல் விளங்கி வருகின்றது.

"பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு".

3. கற்பனை கடந்தால் வீடாம்

டாக்டர் மொ. அ. துரை அரங்கசாமி,
எம். ஏ., எம். ஓ. எல்., பிஎச். டி.,

1. மித்தை விளக்கம்

ஒரு பெயரும் ஒரு வடிவும் தன்பால் இல்லாது ஒப்பமாயும் (சமமாயும்), இரண்டற்று ஒன்றாயும் (அத்துவிதமாயும்), உணர்வொளியாயும் (ஞாநப் பிரகாசமாயும்), நிறைவாயும் (பூரணமாயும்) நிலைபெற்று இருக்கும் அந்தப் பொருளினிடத்தில் (பிரஹ்மத்தினிடத்தில்) தோன்றா நின்ற ஐம்பூத வடிவமான செயப்படுபொருள்கள் (காரியங்கள்) யாவும் கற்பனையினால் (ஆரோபத்தினால்) உண்டாயின என்பது முன் உணர்த்தப்பட்டது. கற்பனையால் தோன்றிக் காணப் படுவன யாவும் கனவுக் காலத்தில் தோற்றும் பொருள்கள் போன்று மித்தையாம், (மெய்ப் பொருள்கள் போல் தோன்றி ஆராய்கின்ற வழி பொய்ப் பொருள்களாய்க் கழிவனவாம்) என்று ஐயந்திரிபின்றித் திண்ணமாய் அறிந்தவனே அறிவன் (ஞானி) ஆவன். அங்ஙனம் அறிந்தவன் வீடெய்துவன்.

1. மித்தை (1) கைவல்யநவநீதம்

"மித்தையாம் ஆரோபத்தால் பந்தமாம்; அபவாதத்தால் முத்தியாம்", என்பது கைவல்ய நவநீத வாய்மொழியாம்.

காணப்படும் பொருள்கள் யாவும் கற்பனைப் பொருள்களே யாதலால், அவற்றை மித்தை என்று கழித்தலே அபவாதமாம். கனவுக் காலத்தில் தோன்றும் பொருள்கள் மித்தையாம் என்பது அனைவரும் தம்முணர்வால் அறிந்த ஒன்றாகும். அதுபோன்று, காணப்படும் பொருள்கள் யாவும் மித்தை என்று அறிதல் வேண்டும். அங்ஙனம் அறிந்தவர் வீடுறுவர்.

1. (2) விசாரசாகரம்

"தேச கால சாமக்கிரியையின்றிச் சொப்பனத்தில் யானை மலை முதலிய பதார்த்தங்கள் உண்டாகின்றன. ஆதலால் அவை, மித்தை எனப்படுகின்றன. அங்ஙனமே ஆகாசாதி பிரபஞ்சத்தின் சிருஷ்டி பிரஹ்மத்தினின்றும் உண்டாகின்றது. அந்தப் பிரஹ்மத்தில் தேச காலங்கள் அற்பமும் இல்லை. சொப்பனத்தில் யானை முதலியவற்றின் உற்பத்திக்கு வேண்டிய தேச காலங்கள் இல்லாவிடினும் அற்பதேச காலங்

கள் இருக்கின்றன. ஆனால், ஆகாசாதிகளின் உற்பத்தியில் அற்பதேச காலங்களும் இல்லை. ஏனெனில், தேசகாலமின்றிய பிரஹ்மத்தினின்றும் ஆகாசாதிகளின் உற்பத்தி கூறப்பட்டிருக்கின்றது. ஆதலால் ஆகாசாதிகள் சொப்பனம் போல மித்தையாம் ;'' என்பது விகார சாகரம்.

2. அபவாதம்

அதத்வியாவிருத்தி வடிவ அபவாதம் என்றும், லயக்கிரம வடிவ அபவாதம் என்றும் இருவகையாக அபவாதம் செய்யப்படும்.

2. (அ) அதத்வியா விருத்தி-விளக்கம்

அதத்வியாவிருத்தியாவது, அஃது அல்லாததினின்றும் நீங்குதல் ஆகும்.

'இது பாம்பன்று கயிறு' என்று தெளிந்தாற்போலவும், 'இவ்வுருவானது கள்வனன்று, கட்டை'யென்று தெளிந்தாற்போலவும், குரவன் கூறிய உபதேசத்தாலும், மறைநூல் டயிற்சியின் ஒளியாலும் உயிரானது (ஆத்மாவானது) பருநுண் கரு உடலுமன்று, கீழ்மேல் பதினான்கு உலகங்களுமன்று, நுண் பருப் பூதங்களும் அன்று (அவற்றின் காரணங்களும் அன்று, அவற்றின் இன்மையும் அன்று), ஏனையவற்றால் சிறப்பித்தல் வேண்டப்படாத அறிவு ஒன்றே (மாத்திரமே) வடிவமான பெரிய பொருளே (பிரஹ்மமே) என்று தெளிவதே, அஃது அல்லாததினின்றும் நீங்குதலாகிய அதத்வியா விருத்தி வடிவ அபவாதமாம்.

2. (ஆ) இலயக்கிரம வடிவ அபவாதம்-விளக்கம்

இலயக்கிரம வடிவ அபவாதமாவது, பருவுடல் முதல் அவ்வியக்தம் ஈறாக உள்ளவற்றைப் பெரிய பொருளில் (பிரஹ்மத்தில்) ஒடுக்கிக் காண்டல் ஆகும்.

செயப்படுபொருளாகிய வியனுலகையும் (ப்ரபஞ்சத்தையும்) அது தோன்றுதற்கு இடம் (உதிஷ்டானம்) ஆன பெரிய பொருளையும், மறை நூற்பயிற்சி, சிந்தனை, தற்காட்சி (சுருதி யுக்தி அநுபவ) வாயிலாக ஆராய்ந்து பார்க்குமிடத்து, அவை ஆடையும் நூலும் போலவும், நகையும் பொன்னும் போலவும், குடமும் மண்ணும் போலவும் (கற்பனையால் வேறு

பட்டிருப்பனவாய் உண்மையில்) வேறுபடாது ஒன்று பட்டிருப்பனவாம். ஆதலால் பருவுடல் முதல் அவ்வியக்தம் ஈருக ஒன்றிலிருந்து மற்றென்று உண்டானவாறே முறையாக ஒடுக்கி உயிருக்கு வேறாகாத பெரிய பொருளைத் தவிர பிறிதொன்று என்பது இல்லை என்று உணர்வதே ஒடுக்கிக் காண்டலாகிய அபவாதமாம். (இலயக்கிரம வடிவ அபவாதமாம்).

2. ஆ (1) பெரிய பொருளில் ஒடுக்கிக் காண்டல்:

பருவுடல் முதல் பெயர் வடிவங்களாக வெளிப்படாத நிலையில் உள்ள மாயை (அவ்வியக்தம்) ஈறாய் உள்ளவற்றைப் பெரிய பொருளில் ஒடுக்கிக் காண்டலாவது: நூலில் தோன்றிய ஆடை நூலையன்றியும், பொன்னிற்றோன்றிய பணி (நகை) பொன்னையன்றியும், மண்ணில் தோன்றிய குடம் மண்ணையன்றியும் இல்லாமை போன்று, "நிலநீர் தீவளி விசும்போடைந்தும் கலந்த மயக்கம்" எனப்படும் பஞ்சீகிருத பூதத்தில் தோன்றிய பருவுடல் முதலியன, ஐந்தும் தம்முள் கலந்த மயக்கத்தால் ஆன பஞ்சீகிருத பூதத்தையன்றியும், ஐந்தும் தம்முள் கலந்து மயங்காத அபஞ்சீகிருத பூதத்தில் தோன்றிய அந்தப் பஞ்சீகிருத பூதம் அப்பூததத்தையன்றியும், அவ்வபஞ்சீகிருத (கலந்து மயங்காது தன் மாத்திரையாய் நிற்கும்) பூதத்திலேயே தோன்றிய நுண்ணுடல் அதனையன்றியும், அத் தன் மாத்திரையுள்ளும் (அவ்வபஞ்சீகிருத பூதத்துள்ளும) நிலம், நீரையன்றியும், நீா, தீயையன்றியும், தீ, வளியையன்றியும், வளி, விசும்பையன்றியும், அவ்விசும்பும் இருட்குணம் (தமோகுணம்) முதன்மையான மாயையின் தோற்றமாம் ஆற்றலிடமாகத் தோன்றினமையின், அஃது அதனையன்றியும், மறைப்பாற்றலும், தோற்ற ஆற்றலும், இருட்குண முதன்மையான மாயையும் சீவ விவகாரத்திற்கு ஏதுவாகிய அவித்தையும், ஈசுவர விவகாரத்திற்கு ஏதுவாகிய மாயையும், அகங்காரத்தில் தோன்றினமையின் அவை 'அகங்காரத்தையன்றியும், அகங்காரம் மகத் தத்துவத்தில் தோன்றினமையின், அஃது அதனையன்றியும், அம்மகத் தத்து வம் பெயர் வடிவம் வெளிப்படாத நிலையினதாகிய மாயை யான அவ்வியக்கத்தில் தோன்றினமையின் அஃது அதனை யன்றியும், அவ் வவ்வியக்தம், கயிற்றின்கண் அரவு போன்று பெரிய பொருளாம் பிரஹ்மத்தையன்றியும் இல்லையென்று அறிவதாம்.

3. யோகசிகோபநிஷத்தில் சான்று

"ஒன்றான சித்தே பிரபஞ்சத்திற்கு உபாதான காரணம்; பிரஹ்மத்தைத் தவிர வேறின்று; ஆதலால், இந்தச் சகலப் பிரபஞ்சமும் பிரஹ்மமே, வேறன்று" என்பது யோகசிகோபநிஷத்து.

4. கற்பனை கடந்தால் வீடு

இங்ஙனம் அஃதல்லாததினின்றும் நீங்குதலான அதத்வியாவிருத்தி வடிவ அபவாதத்தால் நீக்கியும், ஒன்றிலொன்றை ஒடுக்கிக் காண்டலாகிய இலயக் கிரமவடிவ அபவாதத்தால் நோக்கியும் கற்பனை கடந்தால் வீடாம் என்பது இப்போது தெளிவாம்.

4. மாயையால் மாயையை மாய்த்தல்

---

1. மாயையை மாய்க்கும் வழி :

மூடல் (ஆவரணம்), முளைத்தல் (விட்சேபம்) என்னும் இரண்டு ஆற்றல்கட்கும் (சக்திகட்கும்) காரணமான மாயையை மாய்க்கும் வழி யாது ?

நஞ்சினை அதற்குப் பகையான நஞ்சினாலும், இரும்பினை அதற்குப் பகையான இரும்பினாலும், போரில் பகைவர் எய்யும் அம்பினை அதற்குப் பகையான அம்பினாலும், ஆடை முதலியவற்றில் பற்றிய அழுக்கினை அதற்குப் பகையான உவர்மண் முதலிய அழுக்கினாலும், முறையே மருத்துவர். கொல்லர், போர்வீரர், வண்ணார் மாய்த்தல் போலத் தூய்தல்லாத மாயையைத் தூய்தான மாயையாற் கெடுப்பதே மாயையை மாய்க்கும் வழியாகும்,

1. (அ) மாய்த்தல் முறைமை :

தூய்தல்லாத மாயையைத் தூய மாயையினால் மாய்க்கும் வழி யாது ?

1. (அ) (1) ஏழு நிலைகள் :

இந்த மாயைகளால் உயிர்கட்கு (சீவர்கட்கு) ஏழு நிலைகள் (அவஸ்தைகள்) உண்டாகின்றன. அவை, பேதைமை (அஞ்ஞானம்), மூடல் (ஆவரணம்), முளைத்தல் (விட்சேபம்),

காணாத காட்சி (பரோட்ச ஞானம்) கண்ட காட்சி (அபரோட்ச ஞானம்), தழல் கெடல் (சோக நிவிர்த்தி), குளிர்மையாதல் (நிரங்குசதிருப்தி-தடையற்ற இன்பம்) என்பனவாம்.

அ. அஞ்ஞானம் :

(மெய்நூற் கல்வி கேள்விகளுக்கு முன்) உயிர் (சீவன்) பெரிய பொருளாகிய தன்னை (கூடஸ்தனை) யானார் என்று கருதாம லிருந்த அறியாமையே பேதைமையாகும் (அஞ்ஞானம் ஆகும்).

ஆ. ஆவரணம்-மூடல் :

பின் ஒருகால், "பெரிய பொருளே உயிராம்", என்ற பேருரை நிகழக் கேட்டவிடத்தில் "பெரிய பொருள் (பிரஹ்மம்) என்பதொன்றில்லை; அஃதிருந்தால் விளங்கும். இல்லாமை யின் அது விளங்கவில்லை", என்று கூறுதல் மூடல் (ஆவரணம்) ஆகும்.

இ. விட்சேபம்-தோற்றம்

அப்பால் அவன், "வினையைச் செய்பவனும், அதன் பயனை நுகர்பவனும நான்", என்னும் ஓர் எண்ணததால் (தன்னைச் செய்வினை முதலும், நுகர்முதலும் ஆன செய்பவன் (சீவன்) எனக்கருதி, "நான் வினை செய்பவன் (சீவன்)", என வெளிப்படுதல் தோற்றமாம் (விட்சேபமாம்). இது துக்கம், சோகம், பிராந்தி என்றும் கூறப்படும்.

ஈ. பரோட்ச ஞானம்-காணாத காட்சி

பின்பு, உண்மைஅறிவுஇன்பமே பெரிய பொருளாம் என்று அப்பெரிய பொருளின் (பிரஹ்மத்தின்) இருப்பைக் கூறும குரவன் உபதேசத்தினால், (உடம்பினுள்ளே தனக்கு வேறாகாது ஒன்றாயிருக்கின்ற பெரிய பொருளாகிய) தன்னை உண்டென்று உணர்தல் (பெரிய பொருள் இல்லை என்னும் இன்மை உணர்வை ஈட்டித் தரும் (அசத்துவரபாதக) மூடலை (ஆவரணத்தைக்) கெடுக்கும் கண்ணினாற் காணாத அறிவாம் (பரோட்ச ஞானமாம்).

2. அபரோட்ச ஞானம்-கண்ட காட்சி

(பிறகு, நீயே அந்தப் பெரிய பொருளாம் என்னும் பெரு மொழியால்) (மகாவாக்கியத்தினால்) தத்துவ விசாரம் செய்து, (பிறஹ்மத்தைப் பற்றி உசாவியறிந்து) அளவை, அளக்கப்படும்

பொருள் ஆன, மெய்ந்நூல்களிலும் அவற்றால் உணர்த்தப்படும் உயிரிறைகளின் ஒன்றுந்தன்மையிலும் ஏற்படும் எல்லா ஐயங்களும் அடியொடு நீங்கி வேறாகாது ஒன்றான பெரிய பொருளே தானாதல் (பெரிய பொருளாகிய பிரஹ்மம் விளங்கவில்லை என்ற உணர்வை ஈட்டித் தரும் [அபாஞபாதக] மூடலை [ஆவரணத்தை]க் கெடுக்கும்) கண்ணிறை் கண்ட அறிவாம் (அபரோட்ச ஞானமாம்).

அளவை ஐயமும் உயிர் இறை ஐயமும் :

மெய்நூல்களான வேதாந்த நூல்களில் உயிரிறைகளின் (ஜீவப்பிரஹ்மங்களின்) வேற்றுமை (பேதம்) கூறப்படுகின்றதா, வேற்றுமையின்மை (அபேதம்) கூறப்படுகின்றதா என்பது அளவையில் (பிரமாணத்தில்) உள்ள ஐயமாம். உயிர் இறைகளின் (ஜீவப்பிரஹ்மங்களின்) வேற்றுமை உண்மை யானதா, வேற்றுமையின்மை (அபேதம்) உண்மையானதா என்பது அளக்கப்படும் பொருளான உயிர் இறைகளில் உள்ள ஐயமாம்.

"நீ பெரிய பொருள்", என்று அறிவே வடிவமான குரவன் கூறும் பெருமொழியால் (மஹாவாக்கியத்திஞல்), "நான் பெரிய பொருள்", என்று உண்டாகும் கண்ணிறை் கண்ட காட்சியுணர்வு (அபரோட்ச ஞானம்), "பெரிய பொருளை நான் அறியவில்லை", என்னும் பேதமை (அஞ்ஞானம்) "'பெரிய பொருள் இல்லை; விளங்கவில்லை", என்னும் இருவகை மூடல்கள் (ஆவரணம்), "நான் பெரிய பொருள் அல்லன்; நல்வினை தீவினைகளைச் செய்பவனும் இன்ப துன்பங்களை நுகர்பவனுமாகிய உயிர் (ஜீவன்)", என முளைத்தல் (விட்சேபம்) என்னும் இவ்வளவு அறியாமைத் தொகுதியையும் (அவித்தியா சமூகத்தையும்) நாசம் செய்வதாம்.

௨௯. சோக நிவிர்த்தி-துழல் கெடல் :

(பெரிய பொருள் காட்சியான பின்பு), "நான் செய்பவன், நுகர்பவன்", என்னும் வினை முதலாந்தன்மை (ஜீவத்துவம்) நீங்குவதே, கவலை நீக்கமாம் (சோக நிவிர்த்தியும்).

என்னிடத்துப் பிறப்பும், இறப்பும், துளியளவாதல் இன்ப துன்பங்களும், குடும்பத்தளையும் இல்லை; ஆஞல், நான்

பிறப்பிறப்பின்றிய பெரிய பொருளாம்'', என்று அறிவதே கவலை நீக்கமாம் (சோக நிவர்த்தியாம்),

எ. நிரங்குச திருப்தி-குளிர்மையாதல் :

எல்லா வருத்தங்களினின்றும் விடுபட்டவனாய்ச் செய்யத் தக்கனவெல்லாம் செய்யப்பட்டன, அடையத்தக்கனவெல்லாம் அடையப்பட்டன என்னும் மகிழ்ச்சியே தடையற்ற நிறைவாம் (நிரங்குச திருப்தியாம்).

கவலை நீக்கமும் குறைவற்ற நிறைவும் கண்ணினாற்கண்ட காட்சியுணர்வின் பயனாம், (அபரோட்ச ஞானத்தின் பலமாம்). இங்கே கூறிய விளக்கத்தால் தூய்தல்லாத மாயை, தூய மாயையால் கெடும் என்பது செவ்விதின் விளங்கும். ஈண்டுக் கூறிய எழுநிலையுள் (சப்தாவஸ்தையுள்), பேதைமை (அஞ்ஞானம்), மூடல் (ஆவரணம்), தோற்றம் (விட்சேபம்) என்னும் மூன்றும், தளைக்கு அடிப்படையும் (பந்த காரணமும்), கண்ணினாற் காணாத காட்சி (பரோட்ச ஞானம்), கண்ணினாற் கண்ட காட்சி (அபரேர்ட்ச ஞானம்) என்னும் இரண்டும் அவற்றினை நீக்கும் கருவியும், கவலை நீக்கம், குறைவிலா அல்லது தடையிலா நிறைவு என்னும் இரண்டும் வீட்டு வடிவமுமாம்.

1. (ஆ) (2) ஏழு நிலைகள் ஏற்படுவது எவ்வாறு ?

தனக்குத்தானே ஒளிர்வதான அறிவுவடிவ உயிர்க்கு (ஆத்மாவிற்கு) எப்பொழுதும் கண்ணிற் கண்ட காட்சி யுணர்வு(அபரோட்சத்துவம்) இருத்தலின், அதற்குப் பேதைமை முதலிய ஏழுநிலைகள் ஏற்படுவது எவ்வாறு என்ற வினா எழலாம். ஓர் எடுத்துக்காட்டு வாயிலாக அதைத் தெளிவிக் கலாம்.

(அ) எடுத்துக்காட்டு :

பத்துப்பேர்கள் ஒருங்கு சேர்ந்து பொழுது போக்காகப் பல ஊர்களைச் சுற்றிப் பார்த்து வரலானார்கள். அவ்வாறு சுற்றி வரும்போது அவர்கள் ஓர் ஆற்றைக் கடக்க வேண்டி வந்தது. ஆற்றைக் கடந்து மறு கரையை அடைந்ததும், அவர்களுள் தலையாயவன் ஏனைய ஒன்பது பேர்களையும் முறையே ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு, எட்டு,

ஒன்பது என்று எண்ணி அவ்வொன்பதின்மரொடு தான் பத்தாமவன் என்று எண்ணி அறியமாட்டாது திகைத்து நின்றான்.

ஆ. அஞ்ஞானம்

அவ்வாறு திகைத்து நின்றவன் அவ்வொன்பதின்மரை எண்ணிய தன்னைப் பத்தாமவன் (தசமன்) என்றறியாத மயக்கமே பேதைமை (அஞ்ஞானம்) ஆம்.

இ. ஆவரணம்

அதனால், பத்தாமவன் (தான்) இல்லை ; இல்லாமையால், காணோம் என்று கூறுதல் இருவகை மூடல்களாம் (அசத்துவா பாதக ஆவரணம், அபானாபாதக ஆவரணம் ஆம்).

உ. விட்சேபம்

பின்பு, பத்தாமவன் ஆற்றில் மூழ்கி இறந்தான் என்று வருந்தி அழுதல் முளைத்தல் என்னும் விட்சேபமாம்.

ஊ. பரோட்ச ஞானம்

அதற்கப்பால், கல்வி, கேள்வி, அறிவு, ஒழுக்கம் எல்லாம் உடைய வழிப்போக்கன் ஒருவன் அவ்வழியாய் வந்து அவ்வழுகையைக் கேட்டு, அழும் இடத்திற்குச் சென்று, ''பத்தாமவன் ஆற்றில் மூழ்கி இறக்கவில்லை ; அவன் இவ்விடத்திலேயே இருக்கிறான்'', என்று கூற, அவன் சொல்லைப் பத்தாமவன் தேற்றமாகக் கொள்வது கண்ணினால் காணாத காட்சி உணர்வாம் (பரோட்ச ஞானமாம்),

எ. அபரோட்ச ஞானம்

பிறகு அப்பத்தாமவன் அந்த வழிபோக்கனை நோக்கி, ''ஐயன்மீர், அப்பத்தாமவன் எங்கிருக்கிறான் ? அவனைத் தேவரீர் காட்டல் வேண்டும்'', என்று வேண்ட, அவன் அப்பத்தாமவனை நோக்கி, ''ஒன்பதின்மரை எண்ணிய நீயே அப்பத்தாமவன் ஆவாய்'', என்று கூற அதனால் அவன் தன்னைப் பத்தாமவன் எனக் காண்டலே, கண்ணினால் கண்ட காட்சியுணர்வாம் (அபரோட்ச ஞானமாம்);

ஏ. பரோட்ச அபரோட்ச ஞானங்கள் (மீண்டும்)

"குடம் இருக்கின்றது, போர்வை இருக்கின்றது", என்றாற் போல்வதால் உண்டாகும் உணர்வே கண்ணினால் காணாத காட்சி உணர்வாம் (பரோட்சஞானமாம்).

"இதுகுடம், இது போர்வை" என்றார் போல்வதால் உண்டாகும் உணர்வே கண்ணினால் கண்ட காட்சி உணர்வாம் (அபரோட்ச ஞானமாம்).

ஐ. சோகநிவிர்த்தி

கண்ணினாற் கண்ட காட்சியுணர்விற்குப் பின், அப் பத்தாமவன் ஆற்றில் மூழ்கியிறந்தான் என்று வருத்தம் கொண்டழுகை நீங்குவதே, கவலை (சோகம்) நீங்குவதாம்.

ஒ. நிரங்குசதிருப்தி

அதனால், ஐயம் நீங்கி மகிழ்ச்சியடைதலே குறைவிலா அல்லது தடையிலா நிறைவாம் (நிரங்குச திருப்தியாம்).

இந்த எடுத்துக்காட்டால் உயிர்க்கும் ஏழு நிலைகள் (அவத்தைகள்) பொருந்தும் என்பது நன்கு விளங்கும்.

(அ) எடுத்துக்காட்டுக்களுக்கு ஏற்ற வேதாந்தப் பொருள்கள் :

பத்துப்பேர்கள் என்ற உவமத்திற்கு ஏற்ற பொருள், அவித்தையில் உயிரின் நிழலான ஆபாசனும் எண் குழுக்களும் (புரியட்டகம்), உயிரான ஆத்மாவுமாம்.

(ஆ) எண்குழுக்கள்

எண்குழுக்களான புரியட்டகமாவன : (1) விண் முதலிய ஐந்து பூதங்கள், (2) செவி முதலிய ஐந்து அறிகருவிகள், (3) நா (வாக்கு) முதலிய ஐந்து தொழிற் கருவிகள், (4) உயிர்வளி முதலிய ஐந்து வளிகள் (5) மனம் முதலிய நான்கு உட்கருவிகள், (6) அவித்தை, (7) காமம், (8) செய்வினைப் பயன் (கர்மம்) என்பனவாம்.

ஆ (1) விவேகசூடாமணிச் சான்று

"சிரவண மாதி ஐந்தும் சேர்ந்தவாக் காதி ஐந்தும்
வருபிரா ணாதி ஐந்தும் மருவும்வா னாதி ஐந்தும்

இருதய மாதி நான்கும் எய்திய அவித்தை காமம்
பரவுகன் மம்மிவ் வெட்டும் பகர்புரி அட்ட கங்காண்,"
என்பது விவேக சூடாமணி.

ஆபாஸன்–கூடஸ்தன் வேறுபாடுகள்

இந்த ஐம்பெருங்குழூக்களாகிய புரியட்டகமுடைய உயிர் நிழலாகிய ஆபாசன், குடும்பம் என்னும் கானல் நீர் ஆற்றில் புகுந்து, அதனது மனித உடலாகிய கரையில் ஏறி, மெய்யுணர்வு விருப்ப காலத்தில் நான் யார் என்று உசாவித் தன் சொந்த வடிவ உயிராகிய ஆன்மாவின் வேறாகிய ஒன்பது கூறுகளாகிய தத்துவங்களையும் அறிந்து அவற்றை அறியும் தன் சொந்த வடிவை அறியாமையே பேதைமையாகிய அஞ்ஞானமும், அதனால் உயிராகிய ஆத்மா இல்லை, இருந்தால் காணப் படாதா என்னும் இருவகை மூடலாகிய ஆவரணமும், அதனால் பொருட் கற்பனை (அர்த்தாத்தியாசம்) அறிவுக்கற்பனை (ஞாநாத்தியாசம்) வடிவமாக முளைத்தலாகிய விட்சேபமும் அதன்பின்னர்ப் பெரிய பொருள் இருக்கின்றது என்று அறிவே வடிவமாகிய குரவன் கூறும் இறை இயல்புணர்த்தும் தொடராகிய அவாந்தரவாக்கியத்தைக் கேட்டலால், பெரிய பொருளாய பிரஹ்மம் இருக்கின்றது என்னும் காணாத காட்சி உணர்வும் (பரோட்சஞானமும்) அப்பால் பெரிய பொருளாகிய பிரஹ்மம்' யார் என்னும் வினாவிற்கு 'நீயே பெரிய பொருளாகிய பிரஹ்மம்' என்னும் கண்ணாற் கண்ட காட்சியுணர்வும் (அபரோட்சஞானமும்), அதனால் பேதைமை யான அஞ்ஞானத்தால் ஆகிய மூடலென்னும் ஆவரணத்தோடு கூடிய இருவகைக் கற்பனை வடிவ விட்சேப நாசமும் அதனால் தடையற்ற இன்பமும், உயிர் நிழலான ஆபாசனுக்கன்றி தூய உயிராகிய கூடஸ்தனுக்கு உண்டாகாமை அறிதற்பாலதாம்.

இதுகாறும் கூறியவற்றால் மாயையால் மாயை மாய்க்கும் ஆறு இவ்வாறு என்பது நன்கு தெளிவாகும்.

தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்-613 001.

தமிழ்நாடு, இந்தியா

தமிழ்ப் பல்கலைக் கழகப் புதிய வெளியீடுகள்

1. Tamil Literature — உரு. 85/—
   — Prof. M. S. Purnalingam Pillai — U.S.$ 17

2. மொழி நூல்
   — மாகறல் கார்த்திகேய முதலியார் — உரு. 75—

3. Tamil University Machine Translation System (TUMTS) — Rs. 75/— U.S.$ 15
   Co-authors : K. C. Chellamuthu K. Rangan
   K. Murugesan

4. A Study on the Thanjavur Art Plate — Rs. 60/— U,S.$ 12
   — Prof. P. Saravanavel

5. நாமதீப நிகண்டு — உரு. 68—
   — கல்விடைநகர் சிவசுப்பிரமணியக் கவிராயர்

6. மொழி நூற் கொள்கையும் தமிழ்மொழி அமைப்பும் — உரு. 45/—
   — பேரா. கா. சுப்ரமணியப் பிள்ளை

7. Indians in South Africa — Rs. 60/— U.S.$ 12
   — Prof. K. Nambi Arooran

விற்பனைக் கழிவு: அஞ்சல் வழி 25%
நேரில் 30%
அஞ்சல் செலவு தனி
பேராசிரியர் ஆய்வாளர்களுக்கு 40%
விற்பனையாளர்களுக்குப் பெறும்படிகளுக்கு ஏற்ப கழிவு உண்டு.

தொடர்பு கொள்க:- பதிப்புத்துறை இயக்குநர்,
தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர் - 613 001.

தொல்காப்பியம் செய்யுளியல் காண்டிகையுரை

பேராசிரியர் ச. பாலசுந்தரம்

சூ. 1 : மாத்திரை எழுத்தியல் அசைவகை எனாஅ
யாத்த சீரே அடியாப் பெனாஅ
மரபே தூக்கே தொடைவகை எனாஅ
நோக்கே பாவே அளவியல் எனாஅ
திணையே கைகோள் கூற்றுவகை எனாஅ
கேட்போர் களனே காலவகை எனாஅ
பயனே மெய்ப்பா டெச்சவகை எனாஅ
முன்னம் பொருளே துறைவகை எனாஅ
மாட்டே வண்ணமொடு யாப்பியல் வகையின்
ஆறு தலையிட்ட அந்நா லைந்தும்
அம்மை அழகு தொன்மை தோலே
விருந்தே இயைபே புலனே இழைபெனாப்
பொருந்தக் கூறிய எட்டொடுந் தொகைஇ
நல்லிசைப் புலவர் செய்யுள் உறுப்பென
வல்லிதின் கூறி வகுத்துரைத் தனரே.

கருத்து : இது நூன் மரபு முதலாக உவம இயல் ஈறாகக் கூறியவற்றின் காரியமாகவும், பின்வரும் மரபியலை நோக்கிச் செய்யப்படுவதுமாகிய செய்யுட்குரிய உறுப்புக்களை நிரல்படத் தொகுத்து அவற்றின் பெயரும் முறையும் வகையும் கூறுகின்றது.

உரை :- மாத்திரை :- எழுத்துக்களுக்கு ஓதிய இசையும் ஒலியும் பற்றிய அளவும்

எழுத்தியல் வகை : தமிழ் மொழியின் கண் இயலும் எழுத்து வகைகளும்

அசைவகை : நால்வகையாக வகுக்கப் பெறும் அசைகளும் அவற்றை வகுத்துக்கொள்ளுமாறும்

யாத்தசீர் : அசைகளான் யாக்கப்பெற்ற சீர்களும்

அடி : எழுத்தானாகும் அசையானும் சீரானும் வரும் அடிகளும்

யாப்பு : எழுத்து முதலாயவற்றைப் பொருள்பெற யாத்தமைக்கும் யாப்பும்

தூக்கு : சீர்வகையானும் அடிவகையானும் பாக்களைத் துணித்துணர்த்தும் ஓசையறுதியாகிய தூக்கும்.

தொடைவகை : எழுத்தானும் சொல்லானும் இசையழகும் பொருளழகும் வண்ணங்களும் தோன்றத் தொடுக்கும் தொடைகளும் அவற்றின் வகைகளும்,

நோக்கு : செய்யுளைக் கேட்போர் இசை இன்பத்தொடு அதன் பொருள் நுட்பத்தை மீண்டும் மீண்டும் கருதுதற்குக் காரணமாக அமையும் நோக்கும்

பா : சீர் முதலியவற்றானன்றி, ஓசையுளவானே இஃதின்ன பாவென உணர்தற்குக் கருவியாகும் ஓசையும்.

அளவியல் : சீரானும் அடியானும் பாக்களை வரையறை செய்யும் அளவு இலக்கணமும்.

திணை : கைக்கிளை முதலாக மேற்கிளந்த திணைகளும்

கைகோள் : களவும் கற்புமாகிய இருவகை ஒழுகலாறுகளும்

கூற்றுவகை : இதனைக் கூறினோர் இவர் என உணர்த்தும் கூறுவோர் வகையும்

கேட்போர் : இதனைக் கேட்போர் இவர் என உணர்த்தும் கேட்போர் பகுதியும்

களன் : திணையும் கைகோளும் பற்றி நிகழும் வினை நிகழிடமும்

காலவகை : பொருள் நிகழ்வினைத் தெரிவிக்கும் மூவகைக் காலமும் - சிறுபொழுதும் பெரும்பொழுதுமாகிய முதற் பொருளுக்குரிய கால வகைகளும்

பயன் ; செய்யுளால் நிலைபெறத் தோன்றும் பயனும்

மெய்ப்பாடு : அகத்திற்கும் புறத்திற்கும் உரியவாக மெய்ப்பாட்டியலுள் விரித்துக் கூறிய மெய்ப்பாடுகளும்.

எச்சவகை : சொல்லையும் பொருளையும் பற்றி வரும் எச்சங்களும்

முன்னம் : ஈண்டு இஃது இப்பொருட்டு என மனத்தான் உணரும் குறிப்பும்

பொருள் (வகை) : திணையுணர்தற்குத் துணையாகும் முதற்பொருள் கருப்பொருள்கட்குப் பொதுவாக நிற்கும் உரிப்பொருட் கூறுகளும்.

துறைவகை : திணை நிகழ்ச்சியைத் தெரிந்துணர நிற்கும் கருப்பொருட் கூறுகளும்

மாட்டு : சொற்களையும், சொற்றொடர்களையும் பொருள் பொருந்த முன்னும் பின்னும் கூட்டி உணரத் துணை புரியும் கருவியாகிய உறுப்பும்,

வண்ணம் : ஓசைநடையாகிய வண்ணங்களும்

என யாப்பு இயலும் வகையினால் அமைந்த இவ் இருபத்தாறும் அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து இயைபு, புலன் இழைபு என மேலனவற்றொடு பொருந்தக் கூறிய இவ் எட்டுறுப்புக்களொடும் கூடி முப்பத்துநான்கும், நல்லிசைப் புலவோர் செய்யும் செய்யுள் உறுப்பென உறுதி பெறக் கூறி வகுத்துரைக்தனர் இலக்கண நூலோர்,

ஏகாரமும் எனாவும் ஒடுவும் எண்ணிடைச் சொற்கள். இறுதி ஏகாரம் அசை. 'செய்யும்' என்பது அவாய் நிலையான் வந்தது. இவற்றுள், எழுத்து,அசை, சீர், அடி, தூக்கு, தொடை, அளவு, மாட்டு மரபு ஆகியவை கருவி பற்றிய உறுப்புக்கள். மாத்திரை, நோக்கு, பா, மெய்ப்பாடு, வண்ணம், எச்சம், முன்னம். பொருள் துறைவகை ஆகியவை செய்கை பற்றிய உறுப்புக்கள், திணை, கைகோள், கூற்று, கேட்போர், களன், காலம், பயன் ஆகியவை பொருள் பற்றிய உறுப்புக்கள்.

அம்மை முதலாகிய எட்டும் மேற்கூறிய இருபத்தாறு உறுப்புக்கட்கும் அவற்றாலாகிய செய்யுட்கும், செய்யுட் டொகுதிக்கும் உறுப்பாம். இவை செய்யுட்கண் ஒரோ ஒன்று தனித்தும் சிலவும் பலவுமாய் விரவியும் வருதலின் பிரித்துக் கூறினார்.

மேற்கூறிய இருபத்தாறு உறுப்பும் அகமும் புறமுமாகிய பொருளைப் பற்றி வருங்கால் பொருள்நிலைக்கேற்ப செய்கை பற்றியும் பொருள் பற்றியும் வரும் உறுப்புக்களுள் ஏற்பன வரும். யாவும் வரல் வேண்டுமென்னும் யாப்புறவில்லை.

ஏழு நிலத்தெழுந்த செய்யுட்களுள் அடி வரையறை யில்லாத ஆறும் வரையறை இன்றி இவற்றுள் ஏற்பன பெற்று வரும்.

இங்ஙனம் பாகுபாடுறுதலின் "வல்லிதிற் கூறி வகுத்துரைத்தனரே" என்றார்.

செய்யுளும் செய்யுளுறுப்புக்களும் முதலும் சினையும் போலத் தற்கிழமையவாய் நிற்கும் என அறிக.

இனி இடைக்காலத்தார் உறுப்பாகக் கொண்ட 'தளை' யினைத் தொன்னூலார் உறுப்பாகக் கொள்ளாமைக்குக் காரணம் என்னை எனின் ?

'தளை' என்பது சொற்புணர்ச்சி போலச் சீரினது தொழிலேயன்றி வேறொரு உறுப்பினை உண்டாக்குதல் இல்லை ஆகலானும் தளையை உறுப்பாகக் கொள்ளின் சீரான் அடிவகுப்பது பயனில் செயலாதலானும் என்க.

பிற விளக்கங்கள் அவ்வவ் உறுப்பிலக்கண உரையுள் கூறப்படும்.

சூ 2 : அவற்றுள்,
மாத்திரை யளவும் எழுத்தியல் வகையும்
மேற்கிளந் தன்ன என்மனார் புலவர்

கருத்து : மாத்திரையும், எழுத்தும் பற்றிய இலக்கணம் ஆமாறு கூறுகின்றது.

உரை : மேற்கூறிய உறுப்புக்களுள் எழுத்துப் பற்றிய மாத்திரை அளவும் எழுத்துக்களின் இலக்கண வகையும் எழுத்ததிகாரத்துள் கிளந்து ஓதப்பெற்ற தன்மையினவாகும் எனக் கூறுவர் புலவர்.

மேற்கூறிய மாத்திரை அளவுகளாவன : உயிரும் உயிர் மெய்யும் குறிலும் நெடிலுமாகிப் பெறும் மாத்திரைகளும், ஒற்றும் சார்பெழுத்துக்களும் பெறும் மாத்திரைகளும் நீட்டம் வேண்டின் கூட்டி எழுப்பும் அளபெடை மாத்திரைகளும் அளபிறந்துயிர்த்தலும், ஒற்றிசை நீடலுமாகிய மாத்திரைகளும் அகரத்திம்பர் யகரப்புள்ளி ஐயென் நெடுஞ்சினைபோலப் பெறும் மாத்திரைகளுமாம்.

மாத்திரை செய்யுட்கு உறுப்பாமாறு : நீட்டம் வேண்டின் (எழுத்—6) எனவும், அளபிறந்துயிர்த்தலும் ஒற்றிசைநீடலும் (எழுத்—33) எனவும் கூறிய விதிகள் செய்யுளை நோக்கியவை ஆதலானும் அவை அசையினும் சீரினும் நின்று அடிக்கண்

விரவி நால்வகைப் பாக்களுக்கும் உரிய ஓசையை வரைந்துணர்த் தலானும் உறுப்பாயிற்று. "அளவும்" என்றது அளாவுதல் என்னும் நயம் தோன்ற நின்றது.

எழுத்தியலும் வகையான : உயிரும், உயிர்மெய்யும், ஒற்றும், சார்புமாய், உயிரளபெடையுமாய் ஐகார ஒளகாரப் போலியுமாய் இயலுதல்.

எழுத்து, செய்யுளுறுப்பாமாறு : அசையாயும், அசைக்கு உறுப்பாயும் நிற்றலொடு, தொடைகளையும், வண்ணங்களை யும் தோற்றுவித்தலான் உறுப்பாயிற்றென்க.

மாட்டேறு வகையான் மேற்பெறப்பட்டனவற்றைக் கூறுதலான் இவற்றை ஒருங்கு கூறினார்.

சூ 3 : குறிலே நெடிலே குறிலிணை குறினெடில்
ஒற்றொடு வருதலொடு மெய்ப்படநாடி
நேரும் நிரையும் என்றிசின் பெயரே

கருத்து : நிறுத்தமுறையானே அசையாமாறு கூறத் தொடங்கி முதற்கண் ஒருசாரசை இலக்கணங் கூறுகின்றது.

உரை : குறிலும் நெடிலும் தனித்தும் இரு குறில் இணைந்தும் குறிலும் நெடிலுமாக இணைந்தும் வருதலொடு அவை ஒற்றொடு வருதலையும் பொருள்பட ஆராய்ந்து முறையே நேரசை நிரையசை என அவற்றிகுப் பெயர் கூறுவர் புலவர்.

வருதலொடும் என்னும் எச்சஉம்மை புணர்ச்சி விகாரத்தாற் கெட்டது. அதனான் ஒற்றின்றி வருதலும் பெறப்பட்டது. "மெய்ப்பட" என்றதனான் 'குறினெடில்' என்பவை அம்முறை யான் வரப்பெறும் எனக்கொள்க. "என்றிசினோர்" என்பது கடைக்குறந்து நின்றது. ஏகாரம் எண்ணுப் பொருட்டு ...... 'பெயரே' என்னும் ஏகாரம் அசை. குறில், நெடில் என்பவை உயிர்க்கும் உயிர்மெய்க்கும் பொதுவாய் நின்றன.

தனித்த ஓர் எழுத்தே அசையாக நேர்தலின் நேர்அசை என்றும் எழுத்து இரண்டு இணைதலின் நிரையசை என்றும் இவை குணம் காரணமாகப் பெயர் பெற்றன.

நேர், நிரை என்னும் அப்பெயர்களே அவற்றின் "வாய்பாடு" என்பதை உடம்பொடு புணர்த்தலாற் கொள்ள வைத்தார். இவை 'அசை' என்பது ஆறாம் சூத்திரத்தாற் பெறப்படும்.

எடுத்துக்காட்டு: அ, க, அல், கல், ஆ, கா, ஆல், கால் எனவும் அணி, அணில், குரா, குரால் எனவும் வரும்.

எழுத்துக்களின் மாத்திரையை முன்னும் பின்னுமாக மயக்கி ஒரோசைத்தாக அசைத்து நிற்றலின் 'அசை' என்பது காரணக் குறியீடாகும்.

சூ 4: இருவகை உகரமொ டியைந்தவை வரினே
நேர்பும் நிரைபும் ஆகும் என்ப.

கருத்து: பிறிதொருசார் அசை இலக்கணங் கூறுகின்றது.

உரை: மேற்கூறிய நேரும் நிரையுமாகிய அசைகள் குற்றியலுகரத்தொடும் முற்றியலுகரத்தொடும் இணைந்து வரின் முறையே நேர்பு அசையும் நிரைபு அசையும் எனப் பெயராகும் என்று கூறுவர் புலவர்.

இறுதிக்கண் வரும் குற்றியலுகரத்தொடு ஒருங்கு கூறினமையின் இறுதிக்கண் வரும் முற்றியலுகரமே ஈண்டுக் கூறப்பட்டதாகும். அதனானே இவ் உகரங்கள் நேரசை நிரையசைகளின் இறுதிக்கண் வந்து இயையும் என்பது பெறப்படும்.

நேர்பு, நிரைபு என்னும் இக்குறியீடுகளே அவற்றின் வாய்பாடாகவும் நின்றன.

இனி இருவகை உகரமும் எனப் பிரித்தோதி, வாய்பாடு கூறுங்கால் ஒவ்வொரு வாய்பாடே கூறினமையின் இருவகை உகரத்திற்கும் இவ்வாய்பாடுகள் பொது என்பது புலனாம். அதனான் வருமொழிப் புணர்ச்சி நோக்கிக் குற்றியலுகரம் முற்றியலுகரத்தைப் போலவும் ஓசை இயைபு நோக்கி முற்றியலுகரம் குற்றியலுகரத்தைப் போலவும் கொள்ளப் பெறும் என அறிக.

"நாகு வேயொடு நக்கு வீங்குதோள்" என்புழிக்குற்றுகரம் ஓசைமிக்கு நிற்குமாறும்

மின்னு மின்னுமின்னு மின்னு என்புழி முற்றியலுகரம் ஓசை குறைந்து நிற்குமாறும் உணர்க.

மற்று அலகிடுங்கால் எண்ணப்பெறாத குற்றுகரத்தொடு எண்ணப்பெறும் முற்றுகரத்தையும் ஒருங்குவைத்து வாய்பாடு கூறியதென்னையெனின்?

சீர்களிடத்து அசைகளை வகுத்துக் காணுங்கால் ஒற்றெழுத்தை ஒப்பதாய குற்றுகரத்தைச் சிதைத்து மேல் வரும் எழுத்தொடு கூட்டி நிரையசையாகக் கொள்ளுதல் சாலாது என அறிந்து குற்றுகரத்தை மொழி சிதைத்துக் கொள்ளக் கூடாதென விதிக்க முற்பட்டவிடத்து

"கனவுநிகழ் பொழுதின் நாணுவர லியையா"

என அந்நெறியான் வரும் முற்றுகரத்தையும் மொழி சிதைத்துக் கொள்ளற் இயலாமைகண்டு, பின்னர்

"முற்றியலுகரமும் மொழி சிதைத்துக் கொளா
நிற்றலின்றே ஈற்றடி மருங்கினும்" (செய்—10)

என விதி கூறுவாராதலின், அவ்வொற்றுமை கருதிக் கூறினார் என்க.

அங்ஙனங் கூறாவிடின்

'கனவுநிகழ் பொழுதின் நாணுவர லியையா" என்னும்
ஆசிரிய அடி கன வுநி கழ் எனவும் நா ணுவ ர

எனவும் பிரிந்து கருவிளங்காய் கூவிளங்காய் என்னும் மூவசைச் சீராகிக் கலித்தளையாய் நின்று அகவலோசை கெடும். அவற்றைக் கனவு நிகழ் எனவும் நாணு வர எனவும் பிரித்து நிரைபு நிரை நேர்பு நிரையாகக் கொள்ளின் ஆசிரிய உரிச் சீராயமைந்து தன்தளையே பெற்று அகவலோசை பிழையாது நிற்குமாறறிந்து கொள்க.

நேரசையும் நிரையசையும் எழுத்துவகையான் நான்கு நான்கு வகை பெறுதலின் அவற்றொடு இவ் இருவகை உகரத்தைச் சேர்க்கப் பதினாறு வகை ஆதல் வேண்டு மெனினும் தனிக் குற்றெழுத்தைச் சார்ந்து வரும் உகரம் நேர் பசையாகாது எனப் பின்னர் விளக்கப்படுதலான் குற்றுகர ஈற்றசைக்கு ஏழும், முற்றுகர ஈற்றசைக்கு ஏழும் ஆகப் பதினான்கு வகைகளே வரும் என அறிக.

எ—டு : கன்று, காடு, மாண்பு, வரகு, கரும்பு, மலாடு, பனாட்டு எனவும் மின்னு, நாணு, சோர்வு, உருமு, தளர்வு, குலாவு, உறாய்வு எனவும் வரும்.

குறிவெடிலனைசனயச் சார்ந்து முற்றியலுகரம் வரும் பெயர்ச்சொல் அரிதாம். மற்று முற்றியலுகரம் பெரும்பான்மையும் நிலைமொழித் தொழில் காரணமாசப் பெற்ற சாரியை உகர ஈறாக வருதலன்றி இயல்பீற்றுச் சொல்லாக வருதல் அரிதாம் என்க. அதனான் அஃது உயிர் முதன் மொழிவந்தியையுங்கால் குன்றி நிற்குமென அறிக.

இனி நேர்பசை, நிரைபசைகளைக் கொள்ளாதுவிடின், எழுத்தால் வகுக்கப்பெறும் நாலெழுத்தடியாகிய "வண்டு வண்டு வண்டு வண்டு" என்பதனைத் தேமா தேமா தேமா தேமா எனக் கொள்ளல் வேண்டும். ஆண்டுக் குற்றுகரம் எண்ணப் பெறாதென்றமையின் அவை நேரசையாய் நின்று சீராக நிரம்பா. எனவே அவ்விலக்கணமெல்லாம் பிழைபடும். மேலும் குற்றியலுசரம் ஒற்றுப்போல அரைமாத்திரையே பெறுதலானும் உயிரேற இடர் தந்து தனது மாத்திரையை இழத்தலானும் அசையாகக் கொடற்கு இயலாமை அறியலாம். அன்றியும் வெண்பாவின் ஈற்றடி முச்சீராய் இறுதி அசைச் சீராய் நிற்குமென்னும் இலக்கணம் நிரம்பாது கெடும். மேலும் ஈரசைச்சீர்களுள் இயற்சீர் ஆசிரிய உரிச்சீர் என வகுத்தல் பயனில் கூற்றாய் முடியும். ஆசிரிய உரிச்சீர்கள் மூவசைச் சீராய் மயங்கும். அன்றியும் நாலசைச்சீர் வேறுகொள்ள வேண்டும். நாலசைச் சீரை இரண்டு ஈரசைச்சீர் எனக் கோடற்கும் ஓக்குமாகலின் அஃது அறிவியலுக்கு முரணாம் என அறிக.

சூ 5: குறிலிணை உகரம் அல்வழி யான.

கருத்து: மேற்கூறிய நேர்பசைக்கு எய்தியது ஒருமங்கு விலக்குகின்றது.

உரை: நேரசை இருவகை உகரமொடு இணைந்து வருங்கால் நேர்பசையாவது தனிக்குறிலாய நேரசைக்குப் பின் வருதல் அல்லாத வழியேயாம்.

தனிக்குறிலின்பின் வரின் அது நிரையசையாதலன்றி நேர்பசை யாகாதென்பது கருத்து.

(எ—டு) கடு, உசு, மறு, கரு, மழு, உரு என வரின் அவை நிரையசையாம்.

(தொடர்ச்சி அடுத்த இதழில்)

பதிப்பாசிரியர் குழு

திரு. ச. இராமநாதன்,
தலைவர், கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சாவூர்-2.

பேராசிரியர். க. வெள்ளைவாரணன்,
142, கனகசபை நகர், சிதம்பரம்.

சிலம்பொலி சு. செல்லப்பன், எம். ஏ., பி. டி., பி. எல்.,
இயக்குநர், தமிழ் வளர்ச்சித்துறை, சென்னை.

டாக்டர் தமிழண்ணல், எம். ஏ., பிஎச். டி.,
தலைவர், தமிழ்த்துறை, மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம்.

டாக்டர். சி பாலசுப்பிரமணியன்,
எம். ஏ., எம்.லிட், பிஎச். டி.,
தலைவர், தமிழ் மொழித்துறை, சென்னைப் பல்கலைக் கழகம்.

பேராசிரியர். பி. விருத்தாசலம், எம். ஏ.,
முதல்வர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்-2

பேராசிரியர் சி. கோவிந்தராசன்,
மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம்.

புலவர் ஆ. பாலன், எம். ஏ., எம். ஃபில்.,
துணை முதல்வர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்-2

புலவர். மீனா. இராமதாசு, எம். ஏ.,
தலைமைத் தமிழாசிரியர்,
உமாமகேசுவரர மேனிலைப் பள்ளி, தஞ்சாவூர்-2.

திரு பா. மதிவாணன், எம். ஏ., எம்.ஃபில்.,
துணைப்பேராசிரியர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்-2

பதிப்பாசிரியர்

பேராசிரியர் ச. பாலசுந்தரம்

Regd. No. TN/TJ/17.

நூல்-அஞ்சல்

பெறுநர்

திருமிகு ....

....

....

ஆசிரியர்,
தமிழ்ப்பொழில்,
கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
தஞ்சாவூர் - 613 002.

தமிழ்ப் பொழில் கட்டணம்

		உள்நாடு		வெளிநாடு	
தனியிதழ்	ரூ.	2	50	3	00
ஆண்டுக் கட்டணம்	ரூ.	25	00	60	00
வாழ் நாள் கட்டணம்	ரூ.	250	00	600	00

வெளியிடுபவர் : திரு. ச. இராமநாதன், தலைவர் கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
கருந்திட்டைக்குடி, தஞ்சாவூர்-613 002.
அச்சிடுபவர் திரு. M. சந்திரமௌலி,
ஜெமினி அச்சகம், 1897/1, மேலராசவீதி,
தஞ்சாவூர் - 613 009.